
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 டிசம்பர் - 2001 இதழ் - 12



வெளியிடுவோர்
கிறிஸ்துவின் சபையார்,
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | வாலிபர்களுக்கான ஒரு நாள் சிறப்பு முகாம் | 9 |
| 3. | மாணவர் சேர்க்கை அறிவிப்பு | 10 |
| 4. | ஞானஸ்நானத்தின் நோக்கம் | 11 |
| 5. | பெண்கள் பகுதி | 14 |
| 6. | வாலிபர் பகுதி | 18 |
| 7. | சிறுவர் பகுதி | 21 |
| 8. | பிரசங்கி ஒரு கண்ணோட்டம் | 23 |
| 9. | வெளிப்படுத்தின விசேஷம் | 24 |
| 10. | கர்த்தருடைய சபையில்... | 29 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

Editor
***S. RAJANAYAGAM***

Honorary Editor
***J.C. CHOATE***

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol.14** **December 2001** **Issue-12**


ஆசிரியர் உரை

## "மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?"

ஆதியிலே, காலங்களையும், நாட்களையும் நமக்காக உண்டாக்கின தேவனால், நமக்குக் கூட்டிக் கொடுக்கப்படும் சகல நாட்களையும் சமமாகப் பாவித்து, ஒவ்வொரு நாளுக்காகவும் அவருக்கு நன்றி சொல்லி, எல்லா நாட்களிலும் அவர் சித்தம் செய்து, அவருக்கு மாத்திரமே பிரியமாய் வாழவேண்டிய மானிடம், அதிலும் குறிப்பாக புதிய ஏற்பாட்டின் கீழ்வாழும் பாக்கியம் பெற்ற கிறிஸ்தவ, சமுதாயம், கிட்டத்தட்ட, ஆவிக்குரிய காரியங்கள் அனைத்திலும் தட்டுத்தடுமாறி, தடம் புரண்டு கிடப்பதைப் போலவே, நாட்களை விசேஷித்துக் கொள்கின்ற காரியத்திலும் தவறிழைத்துக் கொண்டிருக்கிறது. ஆம், இம்மாத இதழ் உங்கள் கரங்களில் வந்து சேருகின்ற இந்த நாட்கள் உலகெங்கிலுமுள்ள மிகப்பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயத்திற்கு விசேஷித்த நாட்கள். ஆம், பரபரப்புக்கும், படோடாபத்திற்கும், போட்டா போட்டிக்கும், பஞ்சமேதுமில்லாத பண்டிகை நாட்கள். இந்த நாட்களை வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கான அதீத முயற்சியில், அநேகராகிய நீங்களும் உங்களை ஆசையோடு ஈடுபடுத்தியிருப்பீர்கள். வாழ்த்துப் பரிமாற்றம் என்ற பெயரில், பல வண்ண அட்டைகள் அங்குமிங்கும் அலைமோதிக் கொண்டிருக்கும். பெற்றோர்களுடைய வாயில் பஞ்சம் இருந்தாலும், பிள்ளைகளுடைய செயலில் சுபிட்சம் இருக்கும். திண்டாட்டம் உள்ளுக்குள்ளிருந்தாலும், கொண்டாட்டம் வெளியிலிருக்கும். மொத்தத்தில் எல்லாமே ஏகபோகமாக நடக்கும்.

இப்படி, ஒட்டுமொத்த கிறிஸ்தவத்தின் மனநிலையும், செயல்பாடும் உச்சத்திலிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், **"மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?"** என்று தலைப்பிட்டு ஒரு கட்டுரை எழுதினால், அதற்கு என்ன மரியாதை இருக்கும் என்று நானும் கொஞ்சம் தயங்கவே செய்தேன். ஆயினும், இந்தக் கேள்வி

என்னுடையதாயிராமல், வேதாகமத்தின் கேள்வியாய் இருக்கிறபடியால், அதைப் பற்றி சொல்லவேண்டிய நேரத்தில் சொல்லுவதும், எழுத வேண்டிய நேரத்தில் எழுதுவதும், என் மேல் விழுந்த கடமை என்று நான் எண்ணுவதால் எனக்கு நானே ஒப்புதல் தந்து கொண்டேன். அதன் விளைவு தான் நீங்கள் ஏற, இறங்கப் பார்க்கும் இத்தலைப்பும், இந்தத் தலையங்கமும்.

தலைப்பையும், முன்னுரையையும் பார்த்துப்படித்துவிட்டு, வருடத்திற்கு ஒருமுறை வருகிற இக்கொண்டாட்டத்திற்கும் இப்படியொரு முட்டுக்கட்டையா? என்று நீங்கள் முணுமுணுப்பது நன்றாகவே கேட்கிறது. ஆனால் புதிய ஏற்பாட்டில் சொல்லப்படாத ஒரு பண்டிகையை, அதே புதிய ஏற்பாட்டில் கட்டளையிடப்படாத ஒரு நாளில், புதிய ஏற்பாட்டின் கீழ் வாழும் சிலாக்கியம் பெற்றவர்கள், புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு எதிராகக் கொண்டாடுவதைப் பற்றி எழுதுவது இங்கே என் நோக்கமல்ல. ஒருவேளை என்னுடைய முன்னுரை, இதற்கு அடித்தளமிடுவதைப் போல அமைந்திருந்தாலும், நான் அப்படிச் செய்யபோவதில்லை. மாறாக, ஆண்டின் இறுதியில் நின்று கொண்டிருக்கும் நமக்கு, இத்தலைப்பின் மூலம் ஏதாவது பாடங்கள் கிடைக்குமா என்று ஆராய்வதே எமது குறிக்கோள்.

இப்பொழுது, இத்தலைப்புக்கான பின்னணி பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். இது இடம்பெற்றிருக்கும் நூல், அப்போஸ்தலருடைய நடபடிகள். அதிகாரம் பதினைந்து, வசனம் பதினான்கு. இருபத்தெட்டு அதிகாரங்கள் கொண்ட இந்நூலின் இரண்டாம் பகுதியை ஆக்கிரமிப்பவர், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவானவருக்கு அடுத்தபடியாகப் பிரபலமாகியுள்ள பவுலடியார். தன்னுடைய ஊழிய நாட்களில் அவர் மூன்று நற்செய்திப் பயணங்கள் மேற்கொண்டார். அவற்றுள், பர்னபாவுடன் மேற்கொண்ட முதல் பயணத்தின் ஒரு கட்டத்தில் லீஸ்திரா பட்டணத்துக்கு வந்து, தனது வழக்கமான பிரசங்கப் பணியைச் செய்தார். அப்பொழுது, தன் தாயின் வயிற்றிலிருந்து பிறந்தது முதல், சப்பாணியாயிருந்து, ஒருபோதும் நடவாமல், கால்கள் வழங்காதவனாயிருந்த ஒரு மனிதன் குணமாக்கப்படுகிறான் (14;8-10). லூக்கா ஒரு வைத்தியனாக இருந்தபடியால், அங்கே நடந்தது ஓர் அப்பட்டமான அற்புதம் என்பதை, சுகம் பெற்றவனைப் பற்றி முழு விவரங்களைக் கொடுப்பதின் மூலம் எடுத்துரைக்கிறார்.

தங்கள் கண்களுக்கு முன்பாக நடந்ததை நம்பமுடியாத, அதே சமயம் நம்பாமலும் இருக்க முடியாத அப்புறஜாதிப் பட்டணத்தார். **"தேவர்கள் மனுஷ ரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்"** என்று லிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுச் சொன்னார்கள். (அப். 14:11). மேலும், பர்னபாவுக்கும், பவுலுக்கும் முறையே "யூப்பித்தர்" "மெர்க்கூரி" என்று தங்களுக்குத் தெரிந்த தேவர்களுடைய பெயரையும் சூட்டி மகிழ்கிறார்கள். அதுவும், போதாதென்று, தங்களுடைய ஆன்மீக குருவாகிய கோவில் "பூசாரி"யைக் கொண்டு, பூ மாலைகளையும், எருதுகளையும், வாசலண்டையிலே கொண்டுவந்து

அவர்களுக்குப் பலியிடவும் மனதாயிருந்தார்கள்." (வ.13).

இப்படி லீஸ்திரா பட்டணத்தார் தங்களுக்குள்ளே நடந்த அற்புதத்தையும், அதன் மேன்மையையும், அந்த அற்புதத்திற்குக் காரணமாயிருந்த தேவனின் வல்லமையையும், அந்த அற்புதத்தை நடப்பித்த அப்போஸ்தலர்களின் எதிர்பார்ப்பையும், அவர் செய்த பிரசங்கத்தில் அடங்கியிருந்த உண்மைகளையும் **ஆவியின் சிந்தையோடு அனுகாமல்,** மாம்ச கண்ணோட்டமுள்ளவர்களாகி, அறிவுக்கும், ஆண்டவருக்கும் அறவே ஒத்துவராத காரியங்களுக்குத் தங்களை அடிமைப்படுத்தினர். கொரில்லாத் தாக்குதல் போன்று நடந்த இச்சம்பவத்தைச் சற்றும் எதிர்பாராத பர்னபாவும், பவுலும் பதறிப்போய், பயந்து நடுங்கினார்கள். அலறியடித்து தங்கள் வஸ்திரங்களைக் கிழித்தவர்களாக, கூட்டத்துக்குள்ளே ஓடி உரத்த சத்தமாய், **"மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" நாங்களும் உங்களைப் போல பாடுள்ள மனுஷர் தானே. நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு, வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்கு திரும்ப வேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம்" என்றார்கள்.** (14;15)

பவுலும், பர்னபாவும், தங்களுடைய பிரசங்கத்தைச் செய்வதற்கு முன்பாக, லீஸ்திரா பட்டணத்தாரை முதன் முதலாகச் சந்தித்தபோதும் அவர்கள் விக்கிரக வணக்கமுள்ளவர்களாகவே இருந்தார்கள். ஜீவனுள்ள தேவனை அறியாதவர்களாயிருந்து மனம் போனபடி வழிபாடு நடத்திக் கொண்டுதானிருந்தனர். அதனால், அப்பொழுது இந்தப் பவுலும், பர்னபாவும் அப்பட்டணத்தாரைப் பார்த்து, "நீங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்கவில்லை. மாறாக, போதுமான அளவு உபதேசிக்கப்பட்டு, செய்வது தவறு என்று எடுத்துரைக்கப்பட்டு, அதிலிருந்து விடுபடவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டு, அதைச் சற்றும் காதில் வாங்கிக் கொள்ளாமல், தங்களுடைய மாம்சமும் மனதும் விரும்பின பழைய காரியங்களையே மீண்டும் ஆவலோடு செய்ய எத்தனித்தபோதுதான் நம்மைப் போன்றவர்களையே முகம் சுளிக்க வைக்கக் கூடிய இக்கேள்வி கேட்கப்பட்டுள்ளது. அதாவது, உண்மையானது, சத்தியமானது அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு அதைக் கேட்கிறவர்களின் மனதிலே ஒரு மாற்றம் வரவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். அத்தேனே பட்டணத்தாருக்குச் செய்யப்பட்ட பிரசங்கத்திலும் கூட இதே கருத்து வலியுறுத்தப்பட்டிருப்பதை நாம் காணமுடியும். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ எங்குமுள்ள மனுஷர் யாவரும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிடுகிறார்" (அப்.17;30). என்று அதாவது, சத்தியம், நியாயம், நீதி ஆகியவை அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு, கேட்கிறவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. அப்படி, மனந்திரும்பாதவர்களைப் பார்த்து, **ஏன் இப்படிச் செய்கிறீர்கள்** என்று கேட்பது தேவனுடைய பார்வையில் தவறானதல்ல என்பது நன்றாகவே தெரிகிறது.

"மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்ற கேள்வியைக் கொஞ்சம் கிட்டப் போய்ப் பார்த்தால், இக்கேள்வி உணர்ச்சிக் கலவைகளால் ஆனது என்பது பளிச்செனத் தெரியும். ஆம், இக்கேள்விக்குப் பின்னால் ஏமாற்றம், வருத்தம், கோபம், எரிச்சல் போன்றவை ஒளிந்து கொண்டிருக்கிறது. இக்கேள்வியை யாரும் ஒரு சமாதானச் சூழலில் கேட்கமாட்டார்கள். கேள்வி கேட்கிறவருக்கும், கேட்கப்படுகிறவர்களுக்குமிடையே எண்ணத்திலும், செயலிலும், கடுமையான கருத்து வேறுபாடு இருந்தாலொழிய இப்படிப்பட்ட கேள்விகள் எழும்பாது.

சரி, அப்படியானால் ஒரு பாரமான மன நிலையோடு தான் பவுலும், பர்னபாவும் இக்கேள்வியைக் கேட்டிருக்க வேண்டுமென்று நன்றாகவே தெரிகிறது. வசனங்கள் நமக்குக் கொடுக்கும் பின்னணியும் இதை ஊர்ஜிதம் செய்கிறது. இப்பொழுது, இக்கேள்வி பவுலாலும், பர்னபாவாலும் கேட்கப்பட்ட கேள்வி என்ற நிலையிலிருந்து, உங்களைக் கொஞ்சம் உள்ளே இழுத்துச் செல்லுகிறேன். ஏனெனில், பவுல் தானே, பர்னபா தானே என்று நாம் எண்ணிவிட வாய்ப்புண்டு. ஒருவேளை, அப்படி நாம் எண்ணிவிட்டால், நமக்கு கிடைக்க வேண்டிய பாடங்கள் கிடைக்காமல் போகவும் வாய்ப்பு அதிகமுண்டு. ஆகவே, இதை வேறு கோணத்தில் பார்ப்போம்.

தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாம் நிருபம், "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" என்று சொல்கிறது. (2. தீமோ. 3;16). அதாவது, வேத எழுத்துக்கள் எல்லாவற்றையும் தேவன், தமது ஆவியானவரைக் கொண்டு கொடுத்துள்ளார். அப்படியானால், நமது தலைப்பு இடம் பெற்றுள்ள அப். 14;15 வசனமும், அதில் அடங்கியுள்ள கேள்வியும் **தேவனுடையதுதான்.** ஆகவே, இக்கேள்வியை அப்போஸ்தலர்கள் கேட்டார்கள் என்பதைவிட, தன்னுடைய உபதேசத்திற்கு மாறாக நடக்கிறவர்களைப் பார்த்து **தேவன், இக் கேள்வியைக் கேட்டுள்ளார் என்று சொல்வதே மிகப் பொருத்தமானதாக இருக்கும்.** பவுலின் நாட்களில், தாங்கள் செய்ய வேண்டியதற்கு மாறாகச் செய்த லீஸ்திரா பட்டணத்தாரைப் பார்த்து, **"ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?"** என்று கேட்ட, பட்சபாதமில்லாத நமது தேவன், இன்றைக்கு அவர் சித்தத்திற்கும், அவர் கொடுத்துள்ள வேத வசனங்களுக்கும் மாறாகப் புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்கின்ற நாம் செய்யும்போது நம்மைப் பார்த்து அப்படிக் கேட்கமாட்டாரா ? என்ன? சொல்லுங்கள். நிச்சயமாகக் கேட்பார். அப்படியானால், பக்தியின் பேரால் நடத்தப்படும் பம்மாத்துகளுக்கும், ஆவியின் பேரால் நடத்தப்படும் அநியாயங்களுக்கும், கிறிஸ்தவத்தின் பேரால் அரங்கேற்றப்படும் பாரம்பரிய காரியங்களுக்கும் நாம் எப்படி தேவனுக்கு பதில் கொடுக்கப் போகிறோம்?

சரி, இங்கே, தம்முடைய சீடர்களைக் கொண்டு, "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று கேட்ட நம் தேவன், அத்தோடு நிற்காமல், அவர்கள் செய்யத் தவறிய காரியத்தையும் தெளிவுற எடுத்துரைத்து, அதைச் செய்யும்படி தூண்டுகிறார். **"நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு வானத்தையும், பூமியையும்,**

**சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்புங்கள்"** என்று. இந்த வசனத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கும் ஆழமான செய்தி, **"வீணானதை விட்டு உண்மையானதற்குத் திரும்புங்கள்"** என்பது. லீஸ்திரா பட்டணத்தாரே, வீணான தேவர்களை விட்டுத் திரும்புங்கள் என்று அன்றைக்குச் சொல்லப்பட்டது. ஒருவேளை, இதை வாசிக்கும் நாம் யாவரும் வீணான தேவர்களை விட்டுத் திரும்பினவர்கள் தான். இதில் சந்தேகம் எதுவுமில்லை. ஆனால், ஆவிக்குரிய வாழ்வில் வீணான எல்லாவற்றையும் விட்டுத் திரும்பி விட்டோமா? சொல்லுங்கள். இன்னும் திரும்பாமலிருப்போமானால், தேவன் நம் ஒவ்வொருவரையும் பார்த்து, "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?" என்று இன்றும் கேட்கக் கூடியவராகவே இருக்கிறார்.

இங்கே, நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, வீணானது எது? என்பது.. இதைத் தெரிந்து கொள்வதற்குப் பெரிய மேதாவித்தனம் எதுவும் தேவையில்லை. எவைகளெல்லாம் பிரயோஜனமில்லையோ அவைகளெல்லாம் வீண்தான். அப்படியானால், பிரயோஜனமுள்ளவை எவை? அப்போஸ்தலன் பவுல், எபேசு பட்டணத்து மூப்பர்களுக்குச் சொல்லும்போது, **"பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்கவில்லை" என்று கூறுகிறார்** (அப். 20;20). அப்படியானால், வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பவை பிரயோஜனமானவை. வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படாதவை வீணானவை. இன்னும், பிரசங்கித்ததைக் கைக்கொள்வது பிரயோஜனமுள்ளதென்றும், கைக்கொள்ளாமலிருப்பது வீணானது என்றும் கொரிந்தியருக்கு எழுதும்போது பவுல் சொல்லுகிறார். (1. கொரி. 15;2) அப்படியானால், பரலோகத்தின் தேவனால் கொடுக்கப்பட்டதற்கும், அப்போஸ்தலரால் பிரசங்கிக்கப்பட்டிருப்பதற்கும் மாறான எல்லாமே வீண் தானே. உங்களுக்கு விளங்குகிறதா? இல்லையா?

ஆகையால், பிரியமானவர்களே, ஆவிக்குரிய வாழ்வில் வீணானவைகள் எவையென்று நாம் அடையாளம் கண்டு, அவைகளை நம்மை விட்டு விலக்கியே தீரவேண்டும். ஒரு புதிய ஆண்டை ஆவலோடு எதிர்நோக்கியிருக்கும் நாம், வீணானவைகளை ஒழித்துவிடத் தீர்மானிப்போம். வீணானவைகள் என்று அடையாளம் காட்ட அநேக காரியங்கள் கிறிஸ்தவத்தில்உண்டு. அவைகளில், இரண்டே இரண்டு பற்றி மட்டும் உங்களோடு பேச விழைகிறேன்.

## I. "வீணான" சபையை விட்டு விலகுவோம்.

நாம் ஒவ்வொருவரும் இரட்சிப்படைய வேண்டுமென்பதையே விரும்பும் நமது தேவன், நம்மைப் பார்த்து, **"மனுஷரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?** என்று கோபத்தோடும், வருத்தத்தோடும், ஏமாற்றத்தோடும், எரிச்சலோடும் கேட்பதற்கு முன்பாக, நாம் விலக வேண்டிய முதல் காரியம், வீணான சபை ஏனெனில், சபைதான் நமது நித்தியத்தைத் தீர்மானிக்கப் போகிறது. ராஜ்யமாகிய சபையை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கும்படியாகத்தான் இயேசு மீண்டும் வரப்போகிறார் ( 1 கொரி. 15:24)

சரி, "சபை" என்று சொன்னாலே, இன்றைய கிறிஸ்தவத்திற்கு எட்டியாய்க் கசக்கிறது. ஏதோ, இது கிறிஸ்தவத்திற்குச் சற்றும் சம்பந்தமில்லாததொரு வார்த்தை போல் நினைக்கிறது. சபையைப் பற்றி பிரசங்கித்தால், இவர்கள் ஏன் சபையைப் பற்றி இந்தளவு அலட்டிக் கொள்கிறார்கள் என்று சொல்வதோடு, அவர்களை குற்றவாளிகள் போன்றும், பாவிகள் போன்றும் பார்க்கிறது. இன்றைய கிறிஸ்தவத்தின் யதார்த்த நிலை இதுதான்.

அன்பானவர்களே, சபையைப் பற்றிப் பேசுகிறவர்கள் குற்றவாளிகள் என்றால், நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவும் ஒரு குற்றவாளிதான். ஏனெனில், அவர் ராஜ்யமாகிய சபையைக் குறித்து, தன்னுடைய மூன்று வருட ஊழிய காலம் முழுவதும் பேசினார். ஆம், "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று பிரசங்கித்தார். (மத்தேயு.4;17). மேலும் என் சபையைக் கட்டுவேன் என்று வாக்களித்தார் (மத்தேயு.16;18). வாக்களித்தபடியே, பெந்தெகொஸ்தே நாளில் சபையை ஸ்தாபித்தார் (அப்.2;45). அடுத்து, சபையைப் பற்றி பேசுகிறவர்கள் பாவிகள் என்றால், பவுலடியார் ஒரு மகாபாவி. ஏனெனில், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக நாடுகள் பல கடந்து சென்று, ஆங்காங்கே சபையை ஏற்படுத்தினதோடு, "தேவன், இயேசுவை சரீரமாகிய சபைக்குத் தலையாகத் தந்தருளினார்" என்றும் கூறியுள்ளார். (எபே.1;23, கொலோ.1;18).

சபை முக்கியமற்றது என்று கூறும் ஒவ்வொருவரும், தேவனையும், அவருடைய குமாரனையும், பரிசுத்த ஆவியானவரையும் அவமானப்படுத்துகிறார்கள் என்று தைரியமாகக் கூற முடியும். எப்படியெனில், சபை-யானது தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியானது (எபே.39-11). தேவனுடைய அநாதித் தீர்மானத்தின்படியாகவும், அவருடைய அநந்த ஞானத்தின்படியாகவும் (எபே.3;10), இருக்கின்ற "சபையை" முக்கியமற்றது என்று நாம் எப்படிக் கூறலாம்? இயேசுவானவர், தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி சபையை சம்பாதித்தார் என்று அப்.20;28-ல் பார்க்கிறோம். அப்படியானால், தெய்வீகம் நிறைந்த இயேசுவானவர், முக்கியமற்ற ஒன்றுக்காகவா தமது இரத்தத்தைக் கொடுத்தார்? முக்கியமற்ற ஒன்றுக்கு உயிரைக் கொடுக்கும் அளவு அவர் ஏதும் அறியாதவரா? சொல்லுங்கள். இன்னும், பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்ட புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் (2.பேதுரு.1;20, 21) ஏராளமான இடங்களில், சபையைப் பற்றிப் பேசியிருக்கிறார்களே, அப்படியானால் பரிசுத்த ஆவியானவர் விபரம் தெரியாமல் ஏவி, தவறு செய்து விட்டாரா, என்ன? நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

அருமையானவர்களே, சபை மிக மிக முக்கியமானது. அது, பரலோகத்தின் தேவனால் திட்டமிடப்பட்டது (எபே.3:9). அவருடைய தீர்க்கர்களால் முன்னுரைக்கப்பட்டது (தானி.2:44 ஏசாயா.2:2,3, யோவேல்:2:28). இயேசுவால் கட்டப்பட்டது (மத்.16:18) அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்-பட்டது (அப். 2:14). இதுதான் வேதாகமத்தின் சபை. இதுதான்தேவனுடைய சபை. இதுதான் கிறிஸ்துவின் சபை. இந்த சபையில், நீங்கள் அங்கமாக இருந்தால், நீங்கள்

பிரயோஜனமான சபையில் அங்கமாக இருக்கிறீர்கள் என்று பொருள். மற்றபடி எதுவாக இருந்தாலும் அது வீணானதுதான். சந்தேகமில்லை.

ஒருவேளை, நீங்கள் வீணான சபையில் அங்கத்தினர்களாக இருப்பீர்களானால், அதை விட்டு விலகி, பிரயோஜனமான சபைக்குத் திரும்புங்கள்.

**II "வீணான" கிறிஸ்தவ வாழ்க்கையை விட்டு விலகுங்கள்.**

என் மகனே, என் மகளே, "ஏன் இப்படிச் செய்கிறாய்" என்று நம்முடைய தேவன் நம்மைப் பார்த்துக் கேட்பதற்கு முன், நாம் விலக வேண்டிய அடுத்த காரியம், "வீணான கிறிஸ்தவ வாழ்க்கை",

வீணான கிறிஸ்தவ வாழ்க்கையென்று நான் இங்கே சொல்வதால், ஏதோ கிறிஸ்தவ வாழ்க்கையையே வீண் என்று பொருள் கொள்ள வேண்டாம். நிச்சயமாக அப்படியில்லை. கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை. கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு விசுவாசத்தின் வாழ்க்கை. கிறிஸ்தவ வாழ்க்கை ஓர் ஒப்பற்ற வாழ்க்கை. கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு பரிசுத்த வாழ்க்கை. கிறிஸ்தவ வாழ்க்கை ஓர் உன்னத அனுபவத்துடனான வாழ்க்கை. இம்மையில் ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் கொடுக்கும் வாழ்க்கை. இன்னும், கிறிஸ்தவ வாழ்க்கை ஒருசாட்சியின் வாழ்க்கை. கிறிஸ்தவ வாழ்க்கை ஒருகனி கொடுக்கும் வாழ்க்கை. கிறிஸ்தவ வாழ்க்கை தேவாதி தேவனோடு என்றென்றும் வாழ வழிநடத்தும் வாழ்க்கை.

ஆனால், நாம் இங்கே கட்டாயம் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு முக்கியமான காரியம் என்னவென்றால், கிறிஸ்தவர்கள் என்று நம்மை அழைத்துக்கொள்கிற நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கை, **உண்மையாகவே ஒரு கிறிஸ்தவ வாழ்க்கைதானா? என்பதே.** கிறிஸ்து இல்லாத ஒரு வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையாக இருக்க முடியுமா? அல்லது கிறிஸ்துவின் உபதேசம் இல்லாத ஒரு வாழ்க்கைதான் கிறிஸ்தவ வாழ்க்கையாக இருக்க முடியுமா? நிச்சயமாக இருக்க முடியாது. ஆனால், இன்றைக்கு தங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவும் இல்லாமல், கிறிஸ்துவின் உபதேசமும் இல்லாமல் பலர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை, வீணானதாக இல்லாமல், பிரயோஜனமுள்ளதாயிருக்க வேண்டுமானால், நாமும் கிறிஸ்துவைப் போல வாழவேண்டும். கிறிஸ்துவைப் போல் வாழ்வதென்றால், எப்படி? கிறிஸ்து பிதாவின் சித்தம் செய்கிறவராயிருந்தது போல், நாமும் அவர் செய்கிறவர்களாயிருக்க வேண்டும் (யோவான்.434). கிறிஸ்து பரிசுத்தராயிருந்தது போல், நாமும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். (1. பேதுரு 1;15,16). கிறிஸ்துவானவர், சோதிக்கப்பட்டும் பாவமற்றதோர் வாழ்க்கை வாழ்ந்ததுபோல், நாமும் சோதனைகளை ஜெயித்து, பாவங்களற வாழ வேண்டும். (எபி. 4;15).

இன்னும், நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை வீணானதாகஇல்லாமல், பிரயோஜனமானதாக இருக்க வேண்டுமானால், கிறிஸ்தவத்தில் நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியமும், கிறிஸ்துவின் உபதேசத்தின்படியானதாக இருக்க வேண்டும். இயேசுவானவர், சீஷர்களுக்குப் பிரதான கட்டளையைக் கொடுத்த போது, "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்குள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார் (மத்.28;20). அதைப் போன்றே அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தைக் குறைவில்லாமல் செய்திருக்கிறார்கள். எப்படியெனில், ராஜ்யமாகிய சபை ஆரம்பிக்கப்பட்ட பெந்தெகொஸ்தே நாளில், இரட்சிக்கப்பட்டவர்களைக் குறித்து லூக்கா சொல்லும்போது, **"அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்"** என்று கூறுகிறார் (அப்.242). ஆம், பிரயோஜனமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ விரும்புகிறவர்கள், அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டியது அவசியம். "என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் தான் என் சீஷராக இருக்க முடியும்" (யோவான்.8;31) என்று இயேசு தெளிவாகச் சொல்லி விட்டார்.

மேலும், தேவன், ஆவியானவரின் ஏவுதலால் புதிய ஏற்பாட்டைக் கொடுத்தபோது, உபதேசத்தை முக்கியப்படுத்தியே மூன்று நிருபங்களைக் கொடுத்துள்ளார். 1,2 தீமோத்தேயு, மற்றும் தீத்து நிருபங்கள் உபதேசத்தை மையப்படுத்தியே கொடுக்கப்பட்டுள்ளது. உபதேசத்தின் மேன்மையையும், அதன் அத்தியாவசித்தையும் உணர்ந்த ஆதித் திருச்சபை முன்னோடிகள், பாடல், ஜெபம், பிரசங்கம், கர்த்தரின் பந்தி, காணிக்கை என்று ஐந்து பங்குகளைக் கொண்ட ஆராதனையில், பிரசங்கத்திற்குப் பெரும்பகுதி நேரத்தை ஒதுக்கி ஜனங்கள்உபதேசக் காரியங்களில் தவறிழைத்து விடக் கூடாதென்பதில் கவனமாக இருந்துள்ளனர். ஆகையால், நாமும் உபதேசக் காரியங்களில் உறுதியுள்ளவர்களாயிருந்து, பிரயோஜனமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது அவசியம்.

லீஸ்திரா பட்டணத்தாரைப் பார்த்து, அவர்களின் பக்திக்குரிய, வழிமுறைகளைப் பார்த்து அதிருப்தியுற்ற தேவன், வீணானவைகளை விட்டுத் திரும்புங்கள் என்று சொன்னது போல, நம் ஒவ்வொருவரையும் பார்த்து, " வீணானவைகளை விட்டுத் திரும்புங்கள்" என்று இப்பொழுது சொல்கிறார். லீஸ்திரா பட்டணத்தார், தவறான காரியங்களைச் செய்து கொண்டே, தாங்கள் செய்வது சரி என்று ஒரு கட்டம் வரைக்கும் நினைத்துக் கொண்டிருந்ததைப் போன்று, ஒருவேளை நம்முடைய நிலையும் இருக்கலாம். நம்முடைய வாழ்க்கையில் இந்த நேரம் வரைக்கும் தவறானதை சரியென நம்பிக் கொண்டிருக்கலாம். ஆனால், தேவன் நம்மை இம்மட்டும் நேசித்து, சுகம், பெலன், ஜீவன் தந்து வழிநடத்திக் கொண்டிருக்கிறபடியால், எதிர்வரும் புத்தாண்டிலிருந்தாகிலும் வீணானவைகளை ஒழித்துவிட்டு, பிரயோஜனமானவைகளைச் செய்ய நம்மை ஒப்புக்கொடுப்போம்.

நம்முடைய விசுவாசம், நம்முடைய ஞானஸ்நானம், நம்முடைய இரட்சிப்பு,

நம்முடைய பக்தி, நம்முடைய பாடல், நம்முடையஜெபம், நம்முடைய காணிக்கை, நம்முடைய கர்த்தரின் பந்தி, நம்முடைய பண்டிகை நாட்கள், நம்முடைய சடங்காச்சாரமான காரியங்கள் என்று இவை எல்லாவற்றையும், சீர்தூக்கிப் பார்த்து, இவைகள் கிறிஸ்துவின் உபதேசத்தின்படியாகஇருக்கிறதா என்று உறுதி செய்து கொள்வோம். இவை யாவும்கிறிஸ்துவின் உபதேசத்தின்படியாக இருந்தால் நம்முடைய வாழ்க்கை பிரயோஜனமான கிறிஸ்தவ வாழ்க்கை, இல்லாவிட்டால், நிச்சயமாக அது வீணான வாழ்க்கைதான். இதில் உங்களுக்கு ஊசியின் முனையளவும் சந்தேகம் வேண்டாம். வீணாகக் கழிந்த நாட்கள் போகட்டும். வருகின்ற வருடத்திலிருந்தாகிலும் பிரயோஜனமான கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடிவெடுப்போம். இறுதியாக, எரேமியாக தீர்க்கனின் ஒரு வசனத்தை சொல்லி நிறைவு செய்கிறேன். "இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார். நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றி விட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை. (எரே.4;1).

("எதிர்வரும் புத்தாண்டிலே) உங்கள் ஆத்துமா வாழ்கிறது போல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வாழ்த்துகிறேன்".

**செ. ராஜநாயகம்**

# வாலிபர்களுக்கான
# ஒரு நாள் சிறப்பு முகாம்

"வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை" என்ற பிரசங்கியின் அறைகூவலை மனதில் கொண்டு, வாலிபர்களை வேதத்தின் வெளிச்சத்தில் வழி நடத்திச் செல்ல வேண்டும் என்ற தாகத்தோடு, ஒரு சிறப்பு முகாம் காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

*விண்ணவர் அழைக்கிறார்!* *வாலிபரே வாரீர் !*

நாள் : **14-01-2002 திங்கட்கிழமை** (அரசு விடுமுறை நாள்)

இடம் : **தொடர்பு கொள்பவர்களுக்கு தபாலில் அறிவிக்கப்படும்.**
(தமிழகத்தின் ஏதாவதொரு சுற்றுலா மையம்)

_தொடர்பு முகவரி :_

**கிறிஸ்துவின் சபை**
தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701. இந்தியா
தொலைபேசி : (04257) 30030, 30382

# உலக
# வீடியோ வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

வேதாகம முழுநேரப் பயிற்சிக்கு தங்களை அர்ப்பணிக்க வாஞ்சையுள்ள வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலம்** : 3 வருடம் (செமஸ்டர் முறை)

**கல்வித் தகுதி** : +2 தேர்ச்சி (அல்லது) பட்டப்படிப்பு
(திருமணமாகாத ஆண்கள் மட்டும்)

**பட்டம்** : B.B.S. (Bachelor of Biblical Studies)

**தனித்தன்மை** : இந்தியாவின் ஒரே வீடியோ வேதாகமக் கல்லூரி

**ஆசிரியர்கள்** : உலகெங்கிலும் பெயர் பெற்ற, தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவதாசர்கள் (அமெரிக்கா)

**போதிக்கும் முறை** : வீடியோ மூலம் மொழி பெயர்ப்புடன் போதிக்கப்படுகிறது.

தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**உலக வீடியோ வேதாகமக் கல்லூரி**

தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.
இந்தியா
தொலைபேசி : (04257) 30030

# ஞானஸ்நானத்தின் நோக்கம்

**ஞா**னஸ்நானம் வேதம் போதிக்கும் பாடம். வேதாகமத்தில் மிகவும் எளிமையாக அது போதிக்கப்படுவதால், மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிற பாடம் இது. பெரும்பாலானோர் இதன் நோக்கத்தை புரிந்து கொள்ளாதது பெரும் பிரச்சனைகளில் ஒன்றாகும்.

**தேவனுடைய வசனம் இதைக் குறித்து போதிப்பது என்ன?**

முதலாதவாக, ஒரே ஞானஸ்நானம் மட்டுமே (இப்போது) வேதத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். (எபேசியர் 5:5). வேதாகமத்தில் யோவானின் ஞானஸ்நானம், பாடுபடுதலில் ஞானஸ்நானம் போன்ற வேறே ஞானஸ்நானங்கள் கூறப்பட்டுள்ளது. உண்மைதான், ஆகிலும் கி.பி. 64-ல் பவுல் இந்த ஞானஸ்நானத்தைக் கூறுகிறார். அப்படி யாயின், பவுல் எந்த ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகிறார் என்பதை எப்படி தீர்மானிப்பது? இது எளிது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திற்கு திரும்பி, அதிலே கூறப்பட்டுள்ள பல வித்தியாசப்பட்ட மனமாற்ற நிகழ்ச்சிகளின் பட்டியலை சிந்திக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது, ஞானஸ்நானம் என்பது அடக்கம் பண்ணப்படுதல் என்றும், பாவமன்னிப்பை அது கொடுக்கிறது என்றும், அது கர்த்தரால் கொடுக்கப்பட்ட கட்டளை என்றும் கண்டுபிடிப்போம். (அப்போஸ்தலர் 8:27 39; 22:16; 2:38; 10:48).

ஞானஸ்நானத்தைக் குறித்து பேசுகின்ற அநேக வேத வசனங்களை நாம் வாசிக்கும்போது, பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பற்றிய போதனையை அநேகர் காணாமற் கடந்து செல்வர். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கட்டளையிடப்பபாதது என்பதை தயவுசெய்து ஞாபகத்தில் கொள்ள வேண்டும். அது குறித்து பிரசங்கிக்கப்படவுமில்லை. ஞானஸ்நானம் என்ற தலைப்பில் வேதம் பேசும்பொழுது, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானத்தை பரிசுத்தாவியின் ஞானஸ்நானம். யோவான் கொடுத்த ஞானஸ்நானம் போன்ற வேறே ஞானஸ்நானத்தைக் குறித்து பேசும்போதெல்லாம் வேதம் குறிப்பிட்டு (தனிமைப்படுத்தி) பேசுவதை நாம் மனதில் கொள்ள வேண்டும். எப்படியாயினும் மாற்கு 16:16 அப்போஸ்தலர் 2:38 போன்ற வசனப்பகுதிகளில் வரும் ஞானஸ்நானத்தைப் பற்றி பேசுவதெல்லாம் தண்ணீர்

ஞானஸ்நானத்தையே குறிப்பிடுகிறது என்பதை அறிகிறோம். இந்த பொருள்தான் எபேசியர் 4:5-லும் கூறப்படுகிறது.

அடுத்து தவறான கண்ணோட்டத்தில் ஞானஸ்நானம் பண்ணப்படலாம் என்பதாயும் மனதில் கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒருவர் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டதால் ஞானஸ்நானம் பெறலாம் என்று பரவலாகப் போதிக்கப்படுகிறது. மேலும், ஒருவர் இரட்சிக்கப்பட்டால் ஏதாவது ஒரு சபையில் சேர, அவர் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்றும் பேசப்படுகிறது

இந்த இரண்டு போதனைகளிலுமே, ஞானஸ்நானம் ஒரு தவறான நோக்கத்தில் கொடுக்கப்படுவதை உணரலாம். தான் இரட்சிக்கப்பட்டுவிட்டதாற்காக ஒருவர் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே." (கலாந்தியர் 3:27) என்று கூறினார். ஞானஸ்நானத்திற்கு முன்பே ஒருவர் தான் இரட்சிக்கப்படுவதாக கூறினால், அவரும் தாம் கிறிஸ்துவுக்கு புறம்பே இரட்சிக்கப்பட்டுவிட்டதாக எண்ணுவதால், அவர் கிறிஸ்துவை உடையவரல்ல. ஒருவர் தன் செயலை வெளியிட இது ஒரு கள்ள உபதேசமாகிறது.

ஞானஸ்நானம் ஒருவரை சபைக்குள்ளாக்குகிறது. "நாம் யூதராயினும், கிரேக்கராயினும் அடிமைகளாயினும் சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்". (1 கொரிந்தியர் 12:13). இங்கு குறிப்பிடப்படுகின்ற சரீரம் என்பது சபையைக் குறிக்கிறது. (கொலேசேயர் 1:18), இங்கு பேசப்படுகிற ஞானஸ்நானம் பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைக் குறிப்பிடாமல், தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் ஒருவரை சபைக்குள்ளாக்கும்படி கொடுக்கப்பட்டதற்கான ஆதாரம் எதுவுமில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவர் தமது வசனத்தின் மூலம் கிரியை செய்து, அவருடைய வழிநடத்துதலினால் ஒருவர் ஞானஸ்நானத்திலே சரீரம் அல்லது சபைக்குள்ளாகிறார்.

ஞானஸ்நானம் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலை படம் பிடித்துக் காட்டுகிறது. (1கொரிந்தியர் 15:1-4). கிறிஸ்து சிலுவையிலே மரித்தது போல, ஒரு பாவி தன் பாவங்களுக்காக மரிக்கிறான். கிறிஸ்து கல்லறையிலே அடக்கம் பண்ணப்பட்டது போல, அவனும் ஞானஸ்நானமாகிய கல்லறையிலே அடக்கம் பண்ணப்படுகிறான்.

இப்பொழுது அவன் ஒரு புதிய மனுஷனாக எழுப்பப்படுகிறான் (2 கொரிந்தியர் 5:17), இது கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து வந்ததற்கு ஒப்பானது (ரோமர் 6:1-12).

ஞானஸ்நானம் புதிய பிறப்பைக் கொண்டு வருகிறது. கிறிஸ்து குறிப்பிடுகையில்," ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமாட்டான்" என்று கூறினார் (யோவான் 3:5). இது பேசப்படுவது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அல்ல, மாறாக தண்ணீர் ஞானஸ்நானத்தையே பேசுகிறார். பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலில், அவர் தமது வசனத்தின் மூலம் கிரியை நடப்பித்து, ஞானஸ்நானம் பெற்று இராஜ்யமாகிய சபைக்குள் பிரவேசிக்கிறோம். மேலும் 2 கொரிந்தியர் 5:17யும் 1 பேதுரு 1:21, 22யும் வாசிக்கவும்.

ஞானஸ்நானம் மட்டும் ஒருவரை இரட்சிக்காது. ஆனால், ஒருவர் இரட்சிக்கப்பட்ட ஞானஸ்நானம் பெற்றாக வேண்டும். வசனரீதியாக நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுள்ளீர்களா? அப்படியில்லாவிடில், நீங்கள் ஞானஸ்நானம் பெறும்படிக்கு ஜெபிக்கிறோம்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

## உங்கள் ஜெபங்களுக்கு நன்றி

கடந்த அக்டோபர் **25, 26** ஆகிய தேதிகளில் காங்கயத்தில் நடந்த **நான்காவது வேதாகமக் கருத்தரங்கம்** மிகச் சிறந்த முறையில், தேவனுடைய நாம மகிமைக்கேதுவாக நடந்து முடிந்தது. தமிழகம் மற்றும் கர்நாடகா மாநிலங்களைச் சேர்ந்த சுமார் **40** பட்டணங்களிலிருந்து விசுவாசிகள் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கத்திற்காக ஜெபித்த, கொடுத்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றி சொல்லுகிறோம்.

**-ஆசிரியர்.**

# "ஸ்தோத்திரம் செய்கிறவர்களாயிருங்கள்"

நன்றியில்லாதவர்களை எந்தவொரு மனிதனும் மெச்சிக் கொள்ளமாட்டான். தேவன் கூட நாம் நன்றியுள்ள மக்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதாக வேதாகமம் விளம்புகிறது. உண்மையைச் சொன்னால், தேவன் நமக்கு செய்த அனைத்து செயல்களுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று நமக்கு கட்டளையிடுகிறார்.

"தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படி, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது" (2.கொரி. 4;15)

"இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்- திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ள-தாயும் இருக்கும்" (2. கொரி. 9;12).

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி . 4;6).

2. கொரி. 4;15 கூறுகிறபடி ஸ்தோத்திரம் செய்வதின் மூலம் தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாக கிருபை பெருகுகிறது என்று பார்க்கிறோம். தேவனுடைய அளவற்ற கிருபைக்கும் நாம் நன்றி சொல்லுவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

2.கொரி. 9;12 கூறுகிறது, ஸ்தோத்திரம் செய்வதின் மூலமாக பரிசுத்தவான்களின் குறைவுகளில் பூரண பலன் கிடைக்கிறது.

பிலி. 4;6ம் வசனம், இந்த ஸ்தோத்திரத்தை, விண்ணப்பத்திற்கும், வேண்டுதலுக்கும் இடையே இடைச் செருகல் செய்கிறது.

ஏன் தேவன், இந்த ஸ்தோத்திரம் செய்தலை இவ்வளவாய் சுட்டிக்காட்டி வலியுறுத்துகிறார்? இந்த ஒரு செயலின் மூலமாக அவர் நம்மேல் காட்டும் அளவில்லாத கிருபையை, எவ்வாறு குறைவுபட செய்கிறது.

தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்கே அவருக்கு நன்றி செலுத்தாமல், கெட்ட பிள்ளைகளைப் போல தொடர்ந்து அவரிடத்தில் கேட்டுக்- கொண்டேயிருந்தோமானால் நாம் அவரை ஒருபோதும் பிரியப்படுத்தவே முடியாது. நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டு- மென்பதையே தேவன் விரும்புகிறார். அவர் நம்மேல் பொழியப்போகும் அளவில்லா நன்மைகளை பெற, ஸ்தோத்திரம் செய்வதே உதவியாய் இருக்கும். எனவேதான், தேவன் இதைக் கட்டளையாகவும் கொடுத்துவிட்டார் என்று நான் எண்ணுகிறேன்.

எத்தனையோ முறை நாம் ஏதாவது ஒரு காரியத்திற்காக தேவனிடம் ஜெபிக்கிறோம், பெற்றுக்கொள்கிறோம். பிறகு மீண்டும் வேறொரு காரியத்திற்காக கேட்க ஆரம்பித்து விடுகிறோம். முதல் ஜெபம் கேட்கப்பட்டது என்பதை

முழுவதுமாக மறந்துவிடுகிறோம். நாம் பிரயாணங்கள் மேற்கொள்ளும்போது சாலைகளில் நம்முடைய பிரயாணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று ஜெபித்து பிரயாணத்தை ஆரம்பிக்கிறோம். ஆனால் மீண்டும் வந்தடைய வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தவுடன் நாம் பயணித்த பாதுகாப்பான பிரயாணத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாமல் போய் விடுகிறோம். பெரும்பாலும் நாம் ஒவ்வொரு தேவைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகலாம், இடையில் நம் ஜெபத்திற்காக கிடைத்த பதிலை கணக்கிலேயே வைக்காமல், தொடர்ந்து கேட்பது, கேட்பதிலேயே கவனமாயிருந்து, தேவன் நம் ஜெபத்தைக் கேட்கிறாரா? என்ற சந்தேகத்திற்கு தள்ளப்படுகிறோம்.

நாம் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஜெபித்து பிறகு அந்த காரியத்திற்கு பதிலை நாம் பெற்றவுடன் இவருக்கு வார்த்தைகளால் ஸ்தோத்திரம் செலுத்திவிட்டு பிறகு எதிர்கால தேவைகளை அவர் சமூகத்தில் வைப்பது என்பது நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்த ஓர் அற்புதமான பயிற்சியாகும் !

தேவன் நம்மை பாதுகாக்கிறார் என்ற அளவில்லா விசுவாசத்திற்கும், தேவைகளில் சிறந்த வழிகாட்டியாய் இருக்கிறார் என்கிற அளவில்லா நம்பிக்கைக்கும், பெற்றோரைப் போல அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பின் அளவில்லா நிச்சயத்திற்காகவும், கடந்த காலங்களில் அவர் செய்த உதவி, அவர் தந்த பாதுகாப்பு, மற்ற யாவுக்காகவும் நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருப்பது எவ்வளவு அவசியமாய் இருக்கிறது.

ஆகவே நாம் நம்பிக்கையோடும், நிச்சயத்தோடும் ஜெபிக்கவேண்டும். நேற்றைக்கு நம்மேல் அன்புவைத்து நம் ஜெபத்தை கேட்ட நமது தேவன் இன்றைக்கும் நம்மை நேசித்து நம் ஜெபத்தை கேட்பார். 1. யோவா. 5;14,15ல் யோவான் கூறுகிறதுபோல் நாமும் உணரவேண்டும். “நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்” யோவானின் நம்பிக்கை இங்கு மிகப்பெரியதாய் இருக்கிறது. அவன் ஜெபம் செய்யும்பொழுது அதற்கான பதிலை, தான் ஏற்கனவே பெற்றுக் கொண்டதாகவே நம்புகிறான். “நமக்குக் கிடைக்குமென்று நமக்குத் தெரியும்” கடந்த காலத்தில் தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்கு நன்றி சொல்லும்போது தொடர்ந்து நம்பிக்கையோடு தேவனிடத்தில் ஜெபிக்க அது உதவியாய் இருக்கிறது.

மிகவும் பரிதாபத்திற்குரியது என்னவென்றால், கிறிஸ்தவர்களால் ஏறெடுக்கப்படும் நல்ல ஜெபங்களுக்கு “இல்லை” என்ற பதிலே கிடைக்கிறது. அவர்களாகவே அதற்கு பதிலை ஏற்படுத்திக் கொள்-கிறார்கள். ஏனென்றால் தேவன் தங்கள் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும்படி சந்தர்ப்பத்தை கொடுப்ப-தில்லை. அதெப்படி? யாக்கோபு. 1;5-7ல் வாசிக்கிறோம். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ள-வனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில்

கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்.; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக".

சந்தேகமானது, தேவன் நம் ஜெபத்தை கேட்காதபடி அதைக் கொன்றுவிடுகிறது. இந்த சந்தேகத்தை நாம் மேற்கொள்ள ஒரே ஒரு வழி என்னவென்றால், நம் கடந்த கால வாழ்க்கையை திரும்பிப்பார்ப்பதும், தேவன் கடந்த காலத்தில் வைத்த கரிசனையையும் நம் ஜெபத்திற்கு கிடைத்த பதிலையும் நினைத்துப் பார்ப்பதும்தான். நாம் சன்று நின்று, பார்த்து பிறகு நம்முடைய தீர்மானங்களை வார்த்தைகளாக்கி, நம் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் உண்மையாகவே தேவனால்தான் நடந்தது என்று எண்ணவேண்டும். (மற்றபடி ஏதோ சந்தர்ப்பத்தினாலோ, பயத்தினாலோ ஏதும் நடக்கவில்லை) ஆக, அவர் நம்மேல் வைத்த செயல்திறன் கொண்ட பாதுகாப்பு, இவைகளுக்காக ஸ்தோத்திரம் செலுத்துவதன் மூலம் அவருக்கு பாராட்டு செலுத்துகிறோம். நாம் இவ்வாறு செய்யும் இந்த செயலே, நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துகிறது. அவர் இன்னும் கேட்டுக் கொண்டேயிருக்கிறார். அவர் நமக்கு உதவிசெய்ய முன் வருகிறார்.

ஆகையால், நன்றியறிதலுள்ள குணத்தோடு இருப்பது, நமக்கு விசுவாசத்தை பெற்றுக்கொள்ள உதவி செய்கிறது. மேலும், நம்முடைய வாழ்க்கையில் நல்ல காரியங்களை முழு சுதந்திரத்துடன் செயல்பட தேவனை அனுமதிக்கச் செய்கிறது. நாம் அவருடைய உதவிக்காக காத்திருப்பது அவர் தமது சித்தத்தின்படி உதவிசெய்வது ஆகிய இந்த கட்டளைகள் எவ்வளவு அழகாக ஒன்றோடொன்று இணைந்து காணப்பட்டு, எல்லாவற்றையும் கைகூடிவரச் செய்கிறது.

ஆகவே, கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இதை வாசிக்கும் நீங்கள் ஸ்தோத்திரம் செலுத்துவது என்பது எவ்வளவு இன்றியமையாத ஒன்று என்று பாருங்கள். நாம் தேவனிடத்தில் பெற்ற ஒரு நன்மைக்கு ஸ்தோத்திரம் செலுத்தாவிட்டால், வேறொரு நன்மையை தேவனிடத்தில் எதிர்பார்க்க முடியாது.

ஒருவேளை, கடந்த ஆண்டுகளில் நாம் இந்த பழக்கமற்றவர்களாய் இருந்திருப்போமானால் இனிமேல் இந்த பழக்கத்தை தோன்றும் புதிய வருடத்தில் இருந்து கர்த்தர் நமக்கு செய்த ஈவுகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த கற்றுக் கொள்வோம். ஏனென்றால் இது தேவனுடைய கட்டளை. கட்டளை என்பது கட்டாயம் செய்து முடிக்கப்படவேண்டிய ஒன்று.

எனவே ஸ்தோத்திரம் செலுத்துவதன் மூலம் அநேக நன்மைகளை தேவனிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ள அவர் நமக்கு உதவி செய்வாராக!

**B.B. CHOATE** **R.R. NAYAGAM**

# WORLD VIDEO BIBLE COLLEGE

***Applications are invited from committed young men for full time Bible Training***

**Duration** : 3 Years (Semester System)

**Qualification** : +2 pass or Degree

**Degree** : Bachelor of Biblical Studies.

**Uniqueness** : Only Video Bible College in India

**Teachers** : Internationally known, Committed men of God, USA.

**Teaching** : Through Video Equipment with Interpretation

**SCHOLARSHIP AVAILABLE**

**CALL OR WRITE TODAY FOR PROSPECTUS AND OTHER DETAILS TO**

**THE DIRECTOR**

World Video Bible College
Dharapuram Road,
Kangayam - 638 701.
India
Telephone : (04257) 30030

# நாமும் ஜாக்கிரதையாக இருப்போம்....

**பு**த்தாண்டு பிறந்தது இஸ்ரவேலர்களுக்கு! அடிமைகள் என்கிற அலங்கோலம் நீங்கி, ஆண்டவர், அகிலம் ஆள்கிறவர், அகம் நிறைந்து முகம் கவிழ்ந்து ஜனங்கள் ஜெபித்ததினால் கூக்குரல் கேட்டிரங்கி, முட்செடியில் மோசேக்குத் தரிசனமாகி இஸ்ரவேலர்களுக்கு தனது கரிசனையை வெளிப்படுத்தி, தான் மோசேயோடு இருப்பதற்கு அடையாளங்களைக் காண்பித்து, சென்றிடு பார்வோனிடம், பார்வேந்தன் நான் உன்னிடம் இருப்பேன் என்று தேவன் வாக்குக் கொடுத்தனுப்பிய பின்னும், எகிப்தில் பத்து வாதைகளைக் கண்டும், பித்து பிடித்த நிலையிலிருந்து பார்வோன் மாறவேயில்லை, அந்த பத்தாம் வாதையின்போதுதான், தேவ கட்டளை பிறந்து, புத்தாண்டு மலர்ந்து, மோசேயின் தலைமையில் விடுதலை கீதம் முழங்கினது, பின்பு யோசுவாவின் வலிமையான வழிநடத்துதலுடன், குவிந்த யோர்தான் நதி கடந்து நினைவுக்கல் சுமந்த நிகழ்விலிருந்து "அன்பு" "ஜெபம்" "தியானம்", "பயபக்தி", "போதனை", "இரக்கம்", "மாதிரி", "இச்சையடக்கம்", "உத்தமம்", என்கிற கற்களை நாம் இவ்வாண்டு முழுவதும் கண்டு பேருவகை அடைந்தோம், என நம்புகிறேன்.

ஆழி ஆர்ப்பரித்துப் புரண்டு வருவதற்கு ஆதியிலே, ஆதவனின் அலங்கார ஒளி உதிக்கும் முன்னே தேவனின் அநாதி தீர்மானத்தில் வைத்திருந்த சபையை பாழாக்க வேண்டுமென முனைப்புக்காட்டிய பவுல், பரமனின் திருக்குமாரனை தமஸ்குவின் சாலையில் தரிசித்த பின்பு, எதை அழிக்கத் தேடினாரோ, அதையே குவலயத்தின் குட்டித் தெருக்களிலும் பிரஸ்தாபப்படுத்தினார், அந்தப் பவுல் விசுவாசத்தில் பெற்றெடுத்த குமாரன் தீமோத்தேயுவுக்கு நிருபம் வடிக்கையில், "நான் வருமளவும் **வாசிக்கிறதிலும்,** புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் **ஜாக்கிரதையாயிரு**" (1. தீமோ 4;13) என்கிறார். வாலிபர்களாகிய நாம் வாசிக்கும் குணமுடையோராக இருந்திடல் நன்று என்று கருதி கடைசி மாதத்தில் இக்கடைசிக் கல்லை என் குறைமதியுடன் நிறைமதியான தேவ வசனத்தை உளியாகக் கொண்டு செதுக்குகிறேன், பொருத்துப் படித்திடுக.

**வாசித்தல் என்னும் கல்**

"வாசித்தல்" இப்பதத்தை நாம் காண்கையில், ஏதோ ஒரு புத்தகத்தை மேலோட்டமாக, நுனிப்புல் மேய்வது போல படிப்பதுதான் என்று நினைக்கிறோம். அது ஓரளவுக்கு உண்மையானாலும், வாசிப்பதில் நான்கு வகையுண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். முதல் வகை, எளிதாக அல்லது நாம் நினைப்பது போல் மேலோட்டமான வாசித்தலாகும். (ELEMENTARY READING) வாசிக்கும் ஒவ்வொன்றையும் சோதித்து, அப்பகுதி என்ன சொல்கிறது என்பதை அதன் கருத்துக்குள் சென்று பார்த்து வாசிப்பது இரண்டாம் வகை. (INSPECTIONAL READING)

பகுத்துப் படித்தல், காரியங்களை பிரித்துப், பகுத்துப் பொருள் காண்பது (ANA-LYTICAL READING) மூன்றாம் வகை, ஒரே தலைப்பில் கீழ் பல ஆசிரியர்களின் கருத்தையும் ஒன்று சேர்த்து படிப்பது நான்காம் வகை. (SYNTOPICAL READING).

வாலிபர்களே! தீமோத்தேயுவுக்கு பவுல் தூய ஆவியானவரின் துணை கொண்டு எழுதுகையில், "வாசிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறதிலும், உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு" என்கிறார். ஏதோ, தற்செயலாக இப்படி பட்டியலிடப்பட்டதுபோல அடியேனுக்கு தென்படவில்லை. ஏனெனில் ஆவியானவர், இதை ஒரு நோக்கம் கொண்டு, இவ்விதமாக பட்டியலிடுகிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. முதல் பதமாக அவர் **"வாசிக்கிறதிலும்"** என்று எழுதுவதின் உட்பொருள், யாதெனில் முதலில் ஒருவன் வேதத்தையும், அதைச் சார்ந்த பல நூல்களையும் வாசிக்கும் பழக்கம் உடையவனாக இருந்தால்தான், கருவூலத்தில் பொருட்களைச் சிந்தாமல் சிதறாமல் சேர்த்துப் பத்திரப்படுத்துவதுபோல், செய்திகளை தனது கருத்தறையில் கவனமாக சேர்த்து பத்திரப்படுத்தி, பகுத்து, பிறருக்கு புத்தியும், உபதேசமும் செய்ய இயலும் என்பதால் தானோ இறை ஆவியானவர் இப்படி இயம்புகிறார் என்ற நினைப்பு நீர்குமிழ்போல் அடிமனதிலிருந்து எழும்புகிறது.

பவுல், "வாசி" என்ற ஆலோசனைத் தருகிறாரே, அவர் இக்காரியத்தை கடைபிடித்தாரா? இதன் பலனை இவர் அனுபவித்திருக்கிறாரா? என்ற வினாக்கள் வாலிப நெஞ்சங்களில் விழித்தெழுவதை என் அகக்கண்களால் காண்கிறேன். விழிகளை அகலமாக்கி, விஷயங்களை வாசித்திடுக. பவுல், தீமோத்தேயுவுக்கு வரைந்த இரண்டாம் மடலில் விளம்புவதைக் கவனியுங்கள். "....கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்துவந்த மேலங்கியையும், **புஸ்தகங்களையும் விசேஷமாய்த் தோற்சுருள்களையும்,** நீ வருகிறபோது எடுத்துக்கொண்டு வா" (2 தீமோ. 4:13) என்கிறார். இவ்வசனத்தைப் படித்தவுடன் "ஆம்" பவுலுக்கும் நூல்களை வாசிக்கும் பழக்கம் பழகிப்போன ஒன்று என்பதை என்னுடன் நீங்களும் ஆமோதிப்பீர்கள் என நிச்சயமாக நினைக்கிறேன்.

அப்போஸ்தலனாகிய பவுல் தனது இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் (கி.பி. 49-52), அத்தேனே பட்டணத்திற்கு வந்தார். தரணியில் தத்துவ ஞானிகள் தழைத்தோங்கிய இடமது. ஞானத்தை மகுடமாக அணிந்திருக்கும் மகுடபதிகள் நாங்கள், அறிவை அல்லிமலர் மாலை என சூடியிருக்கும் பூதிகள் நாங்கள் என எண்ணி, பவுலை துச்சமாக நினைத்து, புதியவைகளை பேசுவதையும் கேட்பதையும் பொழுதுபோக்காக வைத்திருக்கும் இவர்கள் பவுலை எள்ளிநகையாடி, மார்ஸ் மேடையில் பேசும்படி சவால் விடுத்தார்களே இந்த செருக்குமிக்க பொய் ஞானிகளின் சவாலை பவுல் எப்படி சந்தித்தார். வாலிபர்களே! அவர் அத்தேனே பட்டணத்தை சுற்றி அவர்களது மார்க்க விஷயங்களை பற்றி பலிபீடத்தில் எழுதியிருந்த-வைகளை வாசித்து தெரிந்து வைத்திருந்தார். அவர் விளம்புவதை கவனியுங்கள். "அறியப்படாத தேவனுக்கு" என்று எழுதியிருந்ததே. அறிவாளிகள் என்ற மமதையுடையோரே, நீங்களே அறியாத தேவனுக்கு ஆராதனை செய்கிறீர்கள். ஆவிக்குரிய விஷயங்களில் நீங்கள் அறிவிலிகள் என

அறிந்திடுவீர். உலக ஞானத்தில் உயரிடம் வகிக்கிறோம் என்ற எண்ணத்தை உயிரோடு கலந்து மனித உறவுகளே, உங்கள் புலவர்களே, "நாம் அவருடைய (தேவனுடைய) சந்ததியார்" என்றல்லவா, செப்பினார்கள். இவை இன்னும் உங்களுக்குப் புலப்படவில்லையோ என்று கனல் கக்கும் வார்த்தைகளால் ஞானிகளின் மீது மெய்ஞானக் கணை தொடுத்தாரே. இவை எல்லாம் செய்ய உறுதுணையாய் இருந்தவைகள் எது.

பவுல், பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு பேசினார் என்பது நமக்குக் கிடைக்கும் முதல் பதில். அது மாத்திரமல்ல. சுவிசேஷம் உரைக்க வேண்டும் என்ற பக்தி, வைராக்யம், தைரியம் இவை அனைத்தும் பவுலுக்கு இருந்தது என்பதில் எவ்வளவும் ஐயமில்லை. ஆனால், இவைகளுக்கு எல்லாம் மகுடமாக திகழ்ந்தது. வேதத்தை பல கோணங்களில் வாசித்து தியானித்ததால், வந்த அறிவு தான். மற்றும் அம்மகுடத்தின் மாணிக்கக்கற்களாக, "உங்கள் புலவர்கள் சொல்லியுள்ளார்கள்" என்று கூறும் அளவுக்கு உலக இலக்கிய அறிவு அலங்கரித்தது. இதனால்தான், பவுல் ஞானிகளின் அறியாமையையும் சுட்டிக்காட்ட முடிந்தது. வாலிபர்களே! பவுலின் இப்பழக்கம் அவருக்கு கைக்கொடுத்திருக்கிறது என்று உணர்ந்த நாம், நம்முடைய கைகளில் நல்ல கருத்துக்கள் நிறைந்த ஏடுகளை ஏந்தி அவைகளால் நம் மனத்தோட்டத்தை மணக்கச் செய்தல் சாலச் சிறந்தது.

ஆதியிலே வார்த்தையாயிருந்த நமது ஆண்டவர், இப்பூமியில் பிதாவின் நிருபமாக அறிந்து வாசிக்கப்பட்டார் என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம். அப்படி, இப்புவியில் வசிக்கையில் அவர் கேட்ட வினாக்களில் நாம் கவனிக்க வேண்டிய ஒன்று யாதெனில், **"....நீங்கள் வாசிக்கவில்லையா?"** (மத்.19;4) (மாற்கு. 2;25). என்ற கேள்விதான். எனதருமை வாலிப நெஞ்சங்களே! நமது அருள்நாதர் வையகத்தில் இக்கேள்வியை கேட்டபொழுது, அவரை கேட்டவர்கள், தங்கள் தவறைத் திருத்தி, மீண்டும் வேதத்தை, தியானித்து, வாசிப்பதின் மூலம் கெட்டவர்கள் என்ற நிலைமாறி பரமனின் பாசமிகு பிள்ளைகளாக, மாற வாய்ப்பிருந்தது. ஆனால், நாம் இவ்வுலக வாழ்க்கையில் வாசிக்கும் பழக்கம் என்ற கல் சுமக்காதவர்களாகவே இருந்து, யாவருக்கும் நியமிக்கப்பட்ட மரண நதியில் மூழ்கி நித்திய நியாயத்தீர்ப்பு என்னும் அக்கரையில் இக்காரியத்தில் அக்கறையில்லா-தவர்களாக நின்றால், தனது நியாயாசனத்தில் நீதிபதியாக வீற்றிருந்து, நம்மை நோக்கி, :**"...நீங்கள் வாசிக்கவில்லையா?"** என்ற கேள்வியைத் தொடுப்பார். அப்பொழுது அழுது புரண்டாலும், அக்கினி கடலுக்கு நாம் அப்பாற்பட்டவர்களாக இருக்க முடியாது. ஆகவே, வாலிபர்களே, உங்களில் இப்பழக்கம் இருந்தால் அதை தேவ காரியத்திற்காக பயன்படுத்துங்கள். இல்லையென்றால் வரும் புத்தாண்டிலாவது இப்பழக்கத்திற்கு உங்கள் வாழ்க்கை வயலில் வாலிபத்திலேயே விதை தூவி ஜாக்கிரதையாய் வளர்ந்தோங்கச் செய்யுங்கள். மலரும் புத்தாண்டில் தேவ ஆசீர்வாதம் உங்களோடு இருப்பதாக! ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# தொல்லை தரும் பூச்சிகள்



சிறு தம்பி, தங்கைகளே, தேவன் நமக்கு கொடுத்த கிருபையினாலே, நாம் இந்த ஆண்டு இறுதி மாதத்திற்கு வந்துள்ளோம். இம்மாதத்தில் சிறுபிள்ளைகளாகிய நாம், சிறு பூச்சிகளிடமிருந்து சில முக்கிய பாடங்களை கற்றுக்கொள்வோம்.

சீக்கிரம்! பூச்சிகள் சிலவற்றை குறிப்பிடுங்கள் பார்க்கலாம். அது உங்களுக்கு மிகவும் கடின-மாயிருக்கக் கூடாது. இதுவரைக்கும் 8,00,000 இனங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏறக்குறைய 50,00,000 (வருடத்திற்கு ஏழாயிரம் புது இனங்கள் கண்டுபிடிக்கப்படு-கின்றன). உள்ளதாக விஞ்ஞானிகள் தோராயமாக மதிப்பிடுகின்றனர். வண்டுகள், எறும்புகள், கராப்-பான்கள், பல வண்ணம் கொண்ட வண்டுகள், கரையான்கள், மின்-மினிப்பூச்சிகள், ஈக்கள், வெட்டுக்-கிளிகள் போன்றவையாவும் பூச்சிகளே. பூமியிலுள்ள எல்லாம் மிருகஜீவன்-களிலும் நான்கின் ஒரு பகுதி பூச்சி இனத்தைச் சேர்ந்தவை.

எது மற்ற உயிரினங்களிலிருந்து பூச்சிகளை வேறுபடுத்துகிறது தெரியுமா?

அவைகளின் பிரிக்கப்பட்ட உடம்பும் இணைக்கப்பட்ட கால்களும், தங்களை காத்துக்கொள்ள பயன்படுத்தும் ஓடுகளுமே. அந்த ஓடு "சிட்டின்" எனப்பட்ட பிளாஸ்டிக் போன்றவைகளால் ஆனவை.

ஒரு பூச்சியின் உடம்பு மூன்று பிரிவுகளை உடையது.


1. வாய், கண்கள் மற்றும் உணர்க்கொம்புகளை கொண்டுள்ள தலை.

2. மார்புப் பகுதி, அது பொதுவாக மூன்று ஜோடி கால்களையும் அல்லது ஒன்று அல்லது இரண்டு ஜோடி இறக்கைகளையும் கொண்டது.

3. பல பிரிவுகளைக் கொண்ட வயிறு. அது ஜீரணத்திற்கு உதவும் உறுப்புகளையும் மற்ற முக்கிய உறுப்புகளையும் கொண்டது.


பூச்சிகள் எல்லா இடங்களிலேயும் வாழ்கின்றன. அவை பனிப்படர்ந்த மலைகளிலிருந்து அனல் கக்கும் பாலைவனங்கள் வரையிலும் உள்ளன. அவைகள் குகைகளின் ஆழங்களிலும் மற்றும் வாயு மண்டலங்களின் உயரங்களிலும் காணப்படுகின்றன. அவைகள் இல்லாத ஒரே இடம் உலகத்திலுள்ள கடலும், சமுத்திரங்களும்தான்.

அவைகள், நம்மை கோபமூட்டவும் தொல்லை கொடுக்-கவும் செய்கின்றன.




அவை நம்மை கடிக்கவும், நம்மை வியாதிக்குட்-படுத்தவும் நம்முடைய பயிர்களைச் சேதப்படுத்தவும் நம்முடைய உடை-மைகளை அழிப்பவைகளாகவும்

மிருகங்களையும் நோய்வாய்க்குட்படுத்தி இறக்கும்படியாகவும் செய்கின்றன.



மற்ற நேரங்களில் அவை நமக்கு நண்பர்களாகவே இருக்கின்றன. அவை நம்முடைய செடிகளை அயல்-மகரந்த சேர்க்கையின் இடமாக்குகின்றன. அவைகள் தேன்களைத் தயார் செய்கின்றன. பட்டு நூல்களையும், சில கலாச்-சாரங்களில் உணவாகவும் கூட பயன்படுகின்றன. வெட்டுகிளியும் காட்டுத் தேனும் யோவான் ஸ்நானகனுக்கு ஆகாரமாயிருந்தன (மத்தேயு. 3 ; 4). பூச்சிகள் எல்லா அளவிலும், வடிவிலும் உள்ளன. சில, கண்களால் காணமுடியாத நுண்ணியப் பூச்சிகளாகவும், சில, பெரிய அளவு கொண்டதாயும் உள்ளன.



(கோலியாத் எனும் இராட்சத வண்டு, கால் கிலோ எடையுடையதாக இருக்கும்). பூமியில் மிக தொல்லை தரும் பூச்சிகளுள் இவ்வகைதான் மிகக் கொடியவை. அவைகளுக்கு குரல் வளம் இல்லை. என்றாலும், அதன் சத்தம் ஒரு மைல் தொலைவில் கேட்குமளவிற்கு தொனிக்கும். சில பூச்சிகளுக்கு கண்களே இல்லை. ஆனால் மற்ற-வைகளுக்கோ ஐந்து கண்கள், அல்லது அதற்கு மேலும் இருக்கும். சில வண்டுகள் உடலிலுள்ள முடிகளின் மூலம் கேட்கின்றன. சில வண்டுகளுக்கு காதுகள் கால்களில் இருக்கின்றன. சிலவற்றுக்கு மிக அதிக-மான வலிமையுண்டு. ஒரு வகை எறும்பு தன் உடல் எடையைவிட ஐம்பது மடங்கு அதிகமான எடை-யை தூக்க முடியம். (175 பவுண்டு எடை கொண்ட மனிதன் இப்படி செய்யமுடியுமானால், அவன் நான்கு டன் எடையை தூக்கலாம்). நீதி மொழிகள் ஆசிரியர் பின்வருமாறு எழுதுவதில் ஆச்சரியமொன்றும் இல்லை. "சோம்பேறியே, நீ எறும்பு-னிடத்தில் போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள்" (நீதி. 6 ;6)

பூச்சிகள் நாம் செய்யும் அதே வேலைகளை செய்கின்றன. அவை பாலங்களை கட்டுகின்றன. அடுக்குமாடி வீடுகளைக் கட்டு-கின்றன. மற்றும் ஆசாரிகளைப் போல் வேலை செய்கின்றன. அதிலே சில நர்சுகளும், காவற்காரர்களும், வேட்டைக்காரர்களும் கண்ணி வைத்து பிடிப்பவைகளும் உள்ளன.

தேவன் இவைகளை சிருஷ்-டிக்கும்பொழுது அவருடைய வியப்பான வல்லமையையும் நுட்ப-மான எட்டாத ஞானத்தை வெளிப்ப-டுத்தியிருக்கிறார். இது நம்முடைய பரலோக தேவன் மீது நமக்கு ஆழமான நம்பிக்கையையும், அதிகமான பக்தியையும் ஏற்படுத்த வேண்டும். இந்தப் பாடத்தை நாம் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும்.

உதிக்கப்போகிற புத்தாண்டில் சிறுபிள்ளைகளாகிய உங்களுக்கு மகிழ்ச்சியும், ஆசீர்வாதமும் தங்க ஜெபிக்கிறேன்.

மனன வசனம். நீதி மொழிகள். 6.6

தமிழில் : **ABEL R. NAYAGAM**

# பிரசங்கி ஒரு கண்ணோட்டம்

காலம் : *ஏறக்குறைய கி.மு. 945 - 960*

ஆசிரியர் : *சாலொமோன் ஞானி*

## இந்நூல் பற்றி ....

1. இந்நூலின் எபிரெயத் தலைப்பு "ஒகிலத்" (QOHELETH) என்பதாகும். இப்பதத்திற்கு "பிரசங்கியார்" என்று பொருள்படும்.
2. இந்நூலின் ஆசிரியர் தன்னை "தாவீதின் குமாரன்" என்று அழைக்கிறார். அதோடு "எருசலேமின் ராஜா" என்றும் தன்னை அறிமுகப்படுத்துகிறார். எருசலேமின் ராஜாவாகயிருந்த, தாவீதின் குமாரன் சாலொமோன் ஒருவர் மாத்திரமே. ஆகவேதான் இந்நூலின் ஆசிரியர் சாலொமோன் என்று நாம் புரிந்து கொள்கிறோம்.
3. 1. இராஜாக்கள் 3;9ல் சாலொமோன், தேவனிடம் ஞானத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டார், என்று நாம் காண்கிறோம். இந்நூலில் "ஞானம்" என்ற பொருளைத் தரும் "சேகம்" (CHACAM) என்ற எபிரேய பதம் 50 முறை இடம் பெறுகிறது.
4. அநேக நீதிமொழிகளை சாலொமோன் எழுதினார் என்பதை அறிவோம். பிரசங்கி.12;9-ல் பிரசங்கி "அநேகம் நீதிமொழிகளைச் சேர்த்து எழுதினான்" என்று கூறுகிறது. ஆகவேதான் இந்நூலை சாலொமோன் எழுதினார் என்று புரிந்து கொள்கிறோம்.
5. இந்நூல் "கூடாரப் பண்டிகையின்" போது யூதர்களால் வாசிக்கப்படும். இப்பண்டிகை செப்டம்பர் கடைசியில், அல்லது அக்டோபர் ஆரம்பத்தில் இடம்பெறும்.
6. இந்நூலில் ஞானம் (50 முறையும்), அறிவு (33 முறையும்) மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது என்று (10 முறையும்) இடம் பெற்றுள்ளது.
7. இந்நூலின் மையக் கருத்து "எல்லாம் மாயை" என்பதாகும்.

## இந்நூலின் செய்தி

அ. தேவனின் துணையில்லாதவர்களுக்கு எல்லாம் மாயையாக இருப்பதாக பிரசங்கி கூறுகிறார்.

ஆ. மனிதனின் முழுக் கடமையே தேவனுக்கு பயந்து, கற்பனையைக் கைக்கொள்வதேயாகும்.

# வெளிப்படுத்தின விசேஷம்

அதி. 19 : 1-9.

வெளிப்படுத்தல் 17, 18 ஆகிய அதிகாரங்களில், பாபிலோனுக்கான தேவனுடைய நியாத்தீர்ப்பு நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் 19, "பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தையும் கேட்டேன். அவர்கள் : அல்லேலுயா, இரட்சண்யமும், மகிமையும், கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது" என்று யோவான் கேட்பதிலிருந்து ஆரம்பமாகிறது. பரலோகத்திலுள்ளவைகள் தேவனை இவ்விதமாகத் துதிப்பதை வெளிப்படுத்தல் திரும்பத் திரும்ப விவரிக்கிறது. (வெளி. 4 ; 10-11, 5 ; 4-13, 7 ; 11-12, 11 ;16-18). "அல்லேலுயா" என்ற வார்த்தையின் நேரடிப் பொருள் "யெகோவா உம்மைத் துதிக்கிறோம்" என்பது. தேவன் சிருஷ்டிகராயிருக்கிறபடியால், எல்லாத் துதிக்கும், கனத்திற்கும், மகிமைக்கும் பாத்திரராயிருக்கிறார் (வெளி. 4 ; 11). 19 ; 1ல் குறிப்பிடப்பட்டுள்ள "வல்லமை" என்ற வார்த்தையின் கிரேக்கப் பதம் "டூனாமிஸ்" ( Dunamis ) இந்த வார்த்தையிலிருந்து வந்ததுதான். "டைனமைட்." (Dynamite)என்ற ஆங்கில வார்த்தை. இதன் பொருள் "விசை" (Force). பதினெட்டாம் அதிகாரத்தில், பாபிலோன் அழிக்கப்பட்டது. தேவனுடைய அளவற்ற வல்லமையின் விவரிப்பாக உள்ளது. அது பரலோகத்திலுள்ளவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, துதிக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல், பதினெட்டில், துன்மார்க்கர் மீதான தேவகோபாக்கினை வெளிப்பட்டிருப்பதுபோல, 19ம் அதிகாரம், நீதிமான்கள் இரட்சிக்கப்படுவதை வலியுறுத்துகிறது. ஆகவேதான், 19 ; 1, தேவன் இரட்சிப்புக்குப் பாத்திரராகவும், எல்லா வல்லமைக்கும் காரணமாயிருக்கிறார் என்பதை அங்கீகரிக்கிறது.

ஒன்றாம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள துதிக்கான அடிப்படை என்னவென்று வசனம் இரண்டு கூறுகிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் "சத்தியமும், நீதியுமானவைகள்" என்று விவரிக்கப்பட்டுள்ளது. "தன் வேசித்தனத்தினாலே பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக் கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள்". பாபிலோனை தேவன் நியாயந்தீர்த்ததற்கான இரண்டு பெரிய காரணங்களை நாம் மீண்டும் காண்கிறோம். அவள், பூமியைக் கெடுத்து, கர்த்தருடைய ஜனங்களைத் துன்புறுத்தினாள். (வெளி. 17 ; 1-6, 18 ; 21-24). உலகத்தினுடைய கேட்டுக்குத் தப்ப வேண்டுமென்று, இது மீண்டும் நமக்கு நினைப்பூட்டுகிறது. (2. பேதுரு. 1;4). அதுமாத்திரமல்ல, தேவன் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்றும், நம்முடைய எல்லா உபத்திரவங்களிலும் அவர் கூட

இருக்கிறார் என்றும் நினைவுபடுத்துகிறது. எல்லா அக்கிரமக்காரரும் அழிந்து போவார்கள். எல்லா நீதிமான்களும் மேற்கொள்ளுவார்கள். மூன்றாம் வசனத்தில், பரலோகத்தில் உள்ள திரள் கூட்டம் மறுபடியும் "அல்லேலுயா" என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். "பின்பு, பாபிலோனின் புகை என்றென்றைக்கும் எழும்பிற்று என்று சொல்லப்பட்டிருக்கிறோம்". இது, பாபிலோனுக்கான தேவனுடைய நியாயத்தீர்ப்பு நாள் உண்டு, அந்த மகா நாளுக்குப் பிறகு, "நித்திய அக்கினியிலே", "நித்திய தண்டனைக்காகப்" போவார்கள். (மத். 25 ; 31-46). இயேசு மீண்டும் வருவார். வந்து, "ஜுவாலித்து எரிகிற அக்கினியிலே", "தேவனை அறியாதவர்களையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்டியாத-வர்களையும் பழி தீர்ப்பார். "அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்". (2,தெச. 1 ; 7-10). வெளி. 14 ; 8-11ம் வசனப்பகுதி இந்த பாபிலோனின் வீழ்ச்சியை, நரகத்திலான நித்திய தண்டனைக்கு சமப்படுத்துகிறது. அங்கு தேவனற்றவர்களும், மனந்-திரும்பாத ஜனங்களும் தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவைக் குடிப்பார்கள்" என்றும் ;" பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டி-யானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்-படுவார்கள். அவர்களுடைய வாதையின்புகை சதா காலங்களிலும் எழும்பும். அவர்களுக்கு இளைப்பாறுதல் இராது" என்று சொல்கிறது. இது கிறிஸ்துவின் உபதேசக் கொள்கைகளிலே, நித்திய நியாயத் தீர்ப்புக்கான கொள்கை. (எபி. 6 ; 1-2). இந்தக் கொள்கையானது, பேலிக்ஸை நடுங்க வைத்ததைப் போல கேட்போர் எல்லோரையும் நடுங்க வைக்க வேண்டும். (அப். 24 ; 25). இந்தக் கொள்கையானது, ஜனங்களுக்கு மனந்திரும்புதலைத் தூண்டி, அதனடிப்-படையில் இரட்சிப்படைந்து, அக்கினியிலிருந்து இழுத்து விடப்படுவதற்கான பயத்தை உண்டாக்கும்படியாக திட்டமிடப்பட்டுள்ளது. (யூதா. 23).

துன்மார்க்கருக்கான நித்திய முடிவு குறித்துப் பேசி நம்மை எச்சரித்ததற்குப் பிறகு வெளி. 19 ; 4-9 வசனப்பகுதி, நீதிமான்களுக்கு, பரலோகத்தில் வைக்கபட்டிருக்கிற மகத்தான ஆசீர்வாதங்கள் பற்றிப் பேசுகிறது. வசனம் 4-ல், நமக்கு முதலில் நான்காம் அதிகாரத்தில் அறிமுகம் செய்யப்பட்ட 24 மூப்பர்களும் நான்கு, ஜீவன்களும், "வணக்கமாய் விழுந்து : ஆமென், அல்லேலுயா என்று சொல்லி, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் தேவனைத் தொழுது கொண்டார்கள்". இது, இந்த ஜீவன்கள் இரவும், பகலும் ஓய்வில்-லாமல் என்ன செய்கிறது என்று விவரிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு ஒத்துப் போகிறது. (வெளி. 4 ; 8-11). அடுத்து, வசனம் 5-ல் "மேலும், நமது தேவனு-டைய ஊழியக்காரரே, அவருக்குப் பயப்படுகிற சிறியோரும்,

பெரியோரு-மானவர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் என்று ஒரு சத்தம் சிங்காசனத்திலிருந்து பிறந்தது. "தம்முடைய எல்லா ஊழியக்காரர்-களிடமிருந்தும் துதிகளைப் பெற்றுக்கொள்ள தேவன் பாத்திரராயிருக்கிறார். இந்த வசனம், நாம் தேவனுக்குப் பயந்து, அவருக்கு ஊழியம் செய்ய வேண்டிய அதாவது, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவேண்டு-மென்ற கடமையையும் நினைப்பூட்டுகிறது. இது, எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை. (பிர.12 ; 13). இக்கடமையை நிறைவேற்றும் எல்லாதேசத்-தாரும் தேவனுக்கு ஏற்புடையவர்கள் (அப். 10 ; 34, 35).

வெளி. 14 ; 1-4ல், மீட்கப்பட்ட திரளான கூட்டத்தார் பரலோகில் புதுப்பாட்டைப் பாடுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. இவர்களின் சத்தம் "பெருவெள்ள இரைச்சல் போலிருந்ததாக" விவரிக்கப்பட்டுள்ளது. வெளி. 19 ; 6-ல், "திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம் போலவும், பெரு வெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடி முழக்கம் போலவும், ஒரு சத்தத்தை யோவான் கேட்டான். அந்த சத்தம், "அல்லேலுயா, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம் பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக் கடவோம். ஆட்டுக்குட்டி-யானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன" (19 ; 6-7). இந்த அதிகாரத்தில் யெகோவாவைத் துதிக்கச் சொல்லக் கேட்பது இது நான்காம் முறை. இங்கே அவர் சர்வ வல்லமையுள்ளவராகவும், ராஜ்யபாரம் பண்ணுகிறவராகவும், இருக்கிறபடியால், அவரைத் துதிக்கச் சொல்லுகிறது. இந்த உலகத்தில் எவ்வளவு துன்மார்க்கமும், துன்புறுத்தலும் நடந்தாலும், தேவன் ஆளுகை செய்கிறவராயிருந்து, எல்லாவற்றையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார். தீமை செய்கிற அனைவரும், தேவனுடைய கோபாக்கினையில் பங்கு பெறுவார்கள். என்பதும், தேவனு-டைய, நீதிமான்கள் எல்லோரும் அதற்கான பலனைப் பெறுவார்கள் என்பதும் மிகத் திட்டமான ஒன்று.

இங்கே, முக்கியப்படுத்தப்பட்டிருக்கும் பலன், கிறிஸ்துவின் மணவாட்டி. கிறிஸ்துவானவர் ஆட்டுக்குட்டி (வெளி. 5 ; 6-12). அவருடைய மணவாட்டி, சபை (ரோமர். 7 ; 1-4. 2. கொரி. 11 ; 2 எபே. 5 ; 22-23, வெளி. 19 ; 7- 9). சபையானது கலியாணத்துக்கு முன்பாகவே, ஆட்டுக்குட்டியானவரின் மனைவி என்று அழைக்கப்பட்டுள்ளது. ஆட்டுக் குட்டியானவரின் கலியாணத்துக்கு முன்பாகவே "அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் செய்தாள்" என்று இது சொல்கிறது. (19:7). அந்த நாட்களின் வழக்கத்தின் படியாக, ஒரு பெண், ஒரு மனிதனுக்கு மனைவியாகும்படி நியமிக்கப்-பட்டிருந்தாள்,

திருமணத்துக்கு முன்பாகவே மனைவி என்று அழைக்கப்-படுவதுண்டு. உதாரணமாக, மரியாள், யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருந்தது (மத்.1 ; 18, லூக். 1 ; 27 2 ; 5) இதைப் போன்றே, கிறிஸ்தவர்களாகிய நாமும், இப்பொழுதே, கிறிஸ்துவுக்காக "நியமிக்கப்பட்டிருக்கிறோம் (2. கொரி. 11 ; 2). கலியாணம் பரலோகில் நடைபெறும். ஆனால், ஆட்டுக்குட்டி-யானவரின் மணவாட்டியாகிய சபை இப்பொழுதே மனைவி என்று அழைக்கப்-பட்டுள்ளது.

நித்தியத்திலே, நம்முடைய கர்த்தருக்கு மணவாட்டியாயிருப்பது, உண்மையாகவே ஓர் அற்புதமான ஆசீர்வாதம் என்று நாம் இந்நூலில் வாசிக்-கிறோம். ஆனால், இந்த ஆசீர்வாதம் நிபந்தனைக்குரியது. கர்த்தருடைய மணவாட்டியாயிருப்பதற்கு, நம்மை ஆயத்தம் செய்வது அவசியம், (19 ; 7). கிறிஸ்துவின் மனைவி "ஒரு கற்புள்ள கன்னிகையாக" அவருக்கு ஒப்புக்கொடுக்கப்படுவாள் (2.கொரி. 11 ; 2). நாம் நிபந்தனையின்படி செய்யாவிட்டால், நாம் மணவாட்டியாகச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டோம். கிறிஸ்துவின் மனைவிக்கு, "சுத்தமும், பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" என்று சொல்லப்பட்டுள்ளது. (19 ; 8). 1. யோவான். 3 ; 7ன்படி, அங்கிகள், நீதியை செய்வதின் மூலம் பெற்றுக்-கொண்டவை. "அவர், நீதியுள்ளவராயிருக்கிறது போலத் தானும் நீதியுள்ள-வனாயிருக்கிறான்". நீதியைச் செய்வதின் மூலமே, நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக் கொள்ள முடியும். தேவனுடைய கற்பனைகள் நீதியுள்ளவைகள் (சங் 119:172) நீதியை தரித்துக் கொள்வது தேவனுடைய கற்பனைகளைக் கைக் கொள்வதற்குச் சமமானது. தேவனுடைய சித்தத்தின்படி மாத்திரம் செய்கிறவர்களாயிருந்து, நம்மைப் பாவமற சுத்திகரித்துக் கொண்டு அவருடைய குமாரனின் மணவாட்டியிருப்பதற்கு நம்மை ஆயத்தம் செய்யும்படியாய் தேவன் நம்மை அழைக்கிறார். (மத். 7 ; 21; 2. கொரி. 5 ; 14, 15, 2. தீமோத். 2 ; 21; 1, பேதுரு. 4 ; 1-2). நித்தியத்தில் கிறிஸ்துவின் மணவாட்டி-யாயிருப்பதற்கான ஆசீர்வாதத்தின் முக்கியத்துவம். வெளி. 19 ; 9ல் சொல்லப்பட்டுள்ளது. அங்கே, தூதன் யோவானிடத்தில், "ஆட்டுக்குட்டி-யானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது" என்றான். இது, வெளிப்படுத்தல் நூலில் எழுதப்பட்டிருக்கும் அதே வார்த்தைகள், யோவானுக்குக் கொடுக்கப்பட்டதை நாம் மீண்டும் ஒருமுறை பார்க்கிறோம். இங்கு, ஒரு நாளில் நாம் தம்முடைய குமாரனுடைய கலியாண விருந்தில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பை தேவனே நமக்குத் தருகிறார். வசனம், 9, தேவனுடைய நிபந்தனையை ஏற்றுக்கொள்-பவர்களுக்கு இந்த ஆசீர்வதம் நிச்சயம் என்று சொல்கிறது. தூதன், யோவானிடத்தில், "இவைகள் தேவனுடைய சத்தியமான வசனங்கள் என்று சொன்னான்".

இதன் விலைமதிக்க முடியாத ஆசீர்வாதங்கள் பற்றிய, அற்புதமான வார்த்தைகளை தேவனுடைய தூதன் பேசுவதைக் கேட்டபோது, யோவான், "அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தான்" (19 ; 10). ஆனால் தூதன் அப்படி வணங்குவதை மறுத்து, "இப்படி செய்யாத-படிக்குப்பார்; உன்னோடும் இயேசுவைக் குறித்துச் சாட்சியிட்ட உன் சகோத-ரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான். "மனிதர்கள் தேவ தூதனை ஏன் வணங்கக் கூடாதென்பது இரண்டு காரணங்கள் 19 ; 10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1. தூதர்கள் "நம்மைப் போன்ற ஊழியர்ககாரர்கள்" நம்முடைய சகோதர-ருக்குள்ளே இயேசுவைப் பற்றிய சாட்சி உள்ளது. அவர்கள் பேசின வார்த்தைகள் அவர்களுடையதல்ல, தேவனுடையவை. (தன்னுடைய சொந்த வார்த்தைகளைப் பேசும் தூதர்களை தேவன் சபிப்பார் கலா.1 ; 8)

2. நாம் தேவனை மாத்திரமே வணங்க வேண்டும். (வெளி.4 ; 10 -11, 14 ; 6,7) தூதர்கள் தேவனல்ல. மனிதர்கள் தேவ தூதர்களைக் காட்டிலும் சிறியவர்-களாகப் படைக்கப்பட்டார்கள். (சங். 8 ; 4, 5). ஆகையால், மனிதர்களை வணங்குவது, தேவனுடைய பார்வையில் சுத்தமாக ஏற்புடையதல்ல (அப். 10 ; 25, 26). அநேகர், தங்களுடைய முன்னோர்கள், "பரிசுத்தவான்கள்" "மரியாள்" (இயேசுவின் பூமிக்குரிய தாய்) அல்லது தூதர்களுக்கு ஜெபங்-களை ஏறெடுக்கிறார்கள். இவைகள் வீணானதும், தவறானதுமான ஆராதனை.

**JON MACON** **EZSR**

## வருந்துகிறோம்

நமது மாத இதழுக்காக, பல ஆண்டுகள், ஆங்கில மொழிக் கட்டுரைகளைத் தமிழில் மொழியாக்கம் செய்து வந்தவரும், திண்டுக்கல் மாவட்டம் J. கோட்டை, கர்த்தருடைய சபை ஊழியக்காரரும், எங்களின் மிகுந்த மரியாதைக்குரியவருமான **எஸ்.எஸ். ராஜன் ஐயா** அவர்கள், கடந்த 4-11-2001 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவர் விட்டுச் சென்ற குடும்பத்தாரையும், சபையாரையும் உங்கள் ஜெபங்களில் நினைத்துக் கொள்ளுங்கள்.

**-ஆசிரியர்**

# கர்த்தருடைய சபையில் பிரசங்கியார்களின் கடமைகள்

கிறிஸ்துவின் சபை புதிய ஏற்பாட்டுக் காலத்து சபையை மீட்டமைக்க வகை தேடுகிறது. அது, உபதேசத்திலும், ஆராதனை முறைகளிலும், ஊழியத்திலும், ஆளுகை அமைப்பிலும், வைராக்கிய வாஞ்சைகளிலும், ஜீவியத்திலும் திருமறையின் மாதிரியையே எல்லாவற்றிலும் பின்பற்ற தன்னை ஒப்புக்கொடுத்திருக்கிறது. அதன் உண்மை ஊழியர்கள் சுவிசேஷத்தை பறைசாட்டும் விஷயத்தில் தேவ நியமத்தையே கடைபிடித்து வருகின்றனர்.

அவர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்கின்றனர். "திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு", (2. தீமோ. 4 ; 2). சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டும். பாவிகளை இரட்சிப்பதும், உலகிற்கு ஒரு நம்பிக்கையைக் கொடுப்பதும் தேவனுடைய வல்லமையே. இருளில் பிரகாசிக்கும் ஆவிக்குரிய ஒளி அது; பாவக் கொத்தளங்களை தகர்த்தெறியச் செய்வது தேவ வல்லமை. கிறிஸ்து தமது சபையை ஸ்தாபித்த நாள் துவக்கம், உண்மையும் திறமையுமிக்க, தேவனுடைய முழு ஆலோசனைகளையும் அறிவிக்கத் தக்க மனுஷர்கள் தொடர்ந்து தேவைப்படுகின்றனர். (அப்போஸ்தலர். 20 ;27). இந்த அவசரத் தேவை இருக்கவே செய்யும்.

ஆதிக்கிறிஸ்தவர்களும், ஏவப்பட்ட அப்போஸ்தலர்களும் சுவிசேஷர்களும் இதற்கு முன் மாதிரியைக் காட்டியுள்ளனர். அவர்கள் கர்த்தருடைய மகிமையின் செய்தியை கொண்டுபோய் தங்களுடைய அருகாமையிலிருக்கும் அழிவுறும் மாந்தரை மீட்கும்படி அளவுகடந்த ஆவல் கொண்டு எழுந்தனர். தங்களின் செய்திக்கு சிலுவையிலறையப்பட்டு, உயிர்த்தெழுந்த இரட்சகரையே மையமாகக் கொண்டு, ஆச்சரியப்படத்தக்க வகையில் மனமாற்றம் உண்டாக்கத்தக்கவகையிலும், சிலுவையின் மீது வல்லமையான அன்பு காட்டத்தக்க வகையிலும் பிரசங்கித்தனர். (1. கொரி. 2 ; 2).

பிரசங்க மேடை எப்படியோ அப்படித்தான் சபையும், மிருதுவான, ஜனங்களின் தவறுகளுடன் ஒத்துப் போகிற பிரசங்கங்கள் பெலவீனத்தையும், இப்படியும் அப்படியும் ஆட்டங்காணும் பிராந்திய சபையை உருவாக்கும். ஒவ்வொரு சந்ததியும் "எருசலேமின் பழங்கால" சுவிஷேத்தைக் கேள்வியுற வேண்டும். பாவ நிவிர்த்திக்கான இரத்தம் சிந்தப்படுதலை ஒரு பிரசங்கத்தில் தவிர்க்கப்படுமாகில், அந்த பிரசங்க மேடையே, பலனற்றதாகிவிடுகிறது;

மக்கள் அமர்ந்திருக்கும் சாய்மான இருக்கைகள் மோசமான நிலைக்குத் தள்ளப்படும். சுவிசேஷ சத்தியம் கணப்படுத்தப்படாதபோது, பிரசங்க மேடையே ஒரு காலக் கட்டத்தில் கேலிக்கூத்தாகிவிடும்.

மேய்ப்பர்கள் கண்காணிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

சுவிசேஷகர்கள் பிரசங்கியார்கள் என்றழைக்கப்படுகின்றனர்.

திருமறையின் போதனைப்படி, மேய்ப்பர்கள் (மூப்பர்கள்) மந்தையை மேய்க்கக் கூடியவர்கள் (அப். 20 ; 28). பிரசங்கியார்கள் (சுவிசேஷகர்கள்) பிரசங்கிக்க வேண்டியவர்கள் (2. தீமோ. 4 ; 1-4 ). பிரசங்கியார்கள் பிரசங்கிப்பதும், மேய்ப்பர்கள் மேய்ப்பதுமே சரியான வழி; அது தேவனு-டைய தெய்வீகத் திட்டம். இங்கு பிரிவுக் கூட்டத்தாருக்கு இது இடறலாகும். சுவிசேஷ ஊழியர் மந்தையை (சபையை) மேய்க்க முயற்சிப்பது தேவனு-டைய வழி கண்டு கொள்ளப்படாமல், புறக்கணிக்கப்படுகிறது. மூப்பர்கள் ஆத்துமாக்கள் மீது கவனம் செலுத்த வேண்டியவர்களே அல்லாமல், நலிவுற்ற ஆடுகளை கவனிக்க பிரசங்கியார்களை அவர்கள் தங்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளாக நியமிக்கக் கூடாது. மேய்ப்பர்கள் நோய்யுற்ற ஆட்டுக் குட்டிகளை பராமரிக்க தங்களுக்குப் பதிலாக ஒருவரை நியமித்து பராமரிப்பதல்ல.

பிரசங்கியார்கள் வசனத்தினிமித்தம் பிரயாசப்படவும், பிரசங்கிக்கவும், போதிக்கவும், அறிவுறுத்தலும், வேண்டியவர்கள் (கொலோ.1 ; 24-29 ; 2. தீமோ. 4 ; 1- 5). அநேக பிரசங்கியார்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை "மேய்ப்பர்-களாகப் பணியாற்றியபின் சுவிசேஷகராக மாற சிறிது காலம் பிடிக்கிறது.

"ரெவரெண்ட், பாஸ்டர்" எனும் பட்டம் தரித்துக் கொள்வது, "சராசரி" அங்கத்தினர்களுக்கு மேலாகத் தங்களை கர்த்தருடைய சரீரத்தில் மேட்டிமையாக எண்ண வைக்கிறது. மனத்தெளிவில்லாதவர்கள் பிரசங்கிப்-பவர்களை மேடைகளில் உயர்த்தி, வைப்பதன் மூலம், நாமகரணக் கூட்டத்தாரின் மாதிரிக்கு அவர்களை உட்படுத்தும் நிலையில் முடிவடை-கிறது. தேவனுடைய பார்வையில் உண்மையுள்ள ஊழியர்களே மிக்பெரிய நபர்களாவர்; உயர் ஸ்தானத்தை தான் பெற்றுவிட்டதாக கருதும் நபர்களல்ல. கிறிஸ்தவத்தின் அடிப்படையிலான, முரண்பாடு போல் தோன்றும் மெய்யுரையே மேல் நோக்கும் பாதை கீழே (தாழக்) காணப்படுவதுதான். (மத். 20 ; 25-28). கவர்ச்சி மிக்க மதப்பட்டங்களைத் தரித்துக் கொள்வதன் மூலம் , தேவனுக்கு முன்பாக உயர் ஸ்தானத்தை அடைவதல்ல.

**மதப்பட்டங்களைத் தரிப்பது வசன ரீதியானவை அல்ல**

மாயாமாகும் சமய குருக்களின் எண்ணங்களுக்குத் தீனிபோடும் வித்தியாசப்பட்ட உடைகளும் பலமாய் ஒலிக்கும் மதப்பட்டங்களும் கிறிஸ்தவத்தின் இயல்பை கேலிக்கூத்தாக்கி, விடுகிறது. வேதபாரகரும்,

பரிசேயரும், பகட்டான பட்டம் தரித்துக் கொள்வதில் நாட்டம் கொண்டிருந்தனர். இதன் விளைவு, நமது குருவாகிய இயேசுவுக்கு பிரியமற்றதாக்கி, அவர்களின் முரட்டுத்தனமான எண்ணங்களைப் பிரதிபலித்தது, முழுவீச்சில் செயலாற்றிக் கொண்டிருக்கும், "சமயக் குருக்கள் பாமர மக்கள் என்னும் மனப்பான்மை" நாமகரணக் கூட்டத்தாரின் எண்ணங்களிலும், செயல்களிலும் ஆக்கிரமித்திருந்தாலும், இது புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு அப்பாற்பட்டவை.

இயேசுவின் வார்த்தைகளே அறுதியிடப்பட்ட அதிகாரம் பெற்றவை. "........... நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்...... பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா (ஃபாதர்), போப், கார்டினர், ஆர்ச் பிஷப் (பேராயர்), பாஸ்டர் போன்ற அனைத்து மதப்பட்டங்களையும் கண்டனம் பண்ணி, கர்த்தர் கொடுத்திருக்கும் அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்கிறோம்.

**திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு**

மனிதர்கள் தங்கள் சொந்த யூகத்தின் அடிப்படையில் தரித்துக் கொள்ளும் மதப்பட்டங்களும், கள்ளப் போதகர்களும் கிறிஸ்துவின் மாசற்ற சுத்தமான மார்க்கத்திற்கு ஒரு அழிவு சக்திகளாக, கிறிஸ்தவுக்கே அவமரியாதையைக் கொண்டு வருபவைகளாக, காணப்படுகின்றன. (அப். 20 ; 29, 30). அவர்களின் "வாயை அடக்கவேண்டும்" தீத்து. 1 ; 11). பவுல் மனுஷர்களின் பாரம்பரிய நியாயங்களையும் உலகவழிபாடுகளையும் எதிர்த்துப் பேசுகிறார். (கொலோ. 2 ; 8). தேவனுடைய முழு ஆலோசனைகளும் பிரசங்கிக்கப்படும்போது, அவைகளை விசுவாசித்து கீழ்ப்படிந்தால், ஆவிக்குரிய அனைத்து தேவைகளும் நிறைவாக சந்திக்கப்படுகிறது (யாக்கோபு. 1 ; 21 ; 2. தீமோ. 3 ; 16,17). அந்த மனிதர்களெல்லாம், தேவனைப் பிரியப்படுத்தக்க வகையில் விசுவாசித்து, திருமறையில் எழுதப்பட்டுள்ளபடி நடந்து கொண்டு, அவரை அறிந்து, செய்யவும் போதிக்கவும் வேண்டும். தேவன் சக்திவாய்ந்த ஒரு கருவியாகத் தமது வசனத்தை வைத்துள்ளார்; அவரது நித்திய வசனம் வல்லமையுள்ளதும், ஜீவனுள்ளதும், பலனுள்ளதும், அது அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதாயும் இருக்கிறது. (எபே.6;17, எபி. 4;12 ஏசா. 55;11). தேவ வசனங்களைக் கேட்பவர்கள் அதற்கும் கீழ்ப்படியும்போது, மகிமை நிறைந்த மூன்று விளைவுகள் நடைபெறுகிறது:

(1). புறம்பானவர்கள் கிறிஸ்துவுக்கென மனம் மாற்றப்படுகின்றனர்.

(2). விசுவாசத்திலிருந்து பின் வாங்கிப் போவார் மறுபடியும் மீட்கப்படுகின்றனர்.

(3). முடிவு பரியந்தம் நிலைத்திருக்கும் இரட்சிக்கப்பட்டவர்கள் தங்கள் இரட்சிப்பின் நிலையிலே உறுதியாகத் தரித்திருந்து, நித்திய இரட்சிப்பைப் பெறுகின்றனர். (1. கொரி. 15 ; 58). இப்படியாக, சபை பலம் பெற்று, அதன் செல்வாக்கு நன்கு விஸ்தாரமாக்கப்படுகிறது.

பாவத்தினால் வியாதிப்பட்டுள்ள இவ்வுலகில், பிரசங்கியார்கள் ஒரு மிகப் பாரமான சுமையை சுமந்து செல்கின்றனர். தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளும்படி கிறிஸ்துவர்களுக்கு அறைகூவல் விடுத்து, பாவத்திற்கு எதிராக போரிடுகின்றனர்; பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நின்று, அந்தப் பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், போராட ஊக்கப்படுத்த வேண்டும். (எபே. 6 ; 10-18). கர்த்தருடைய சபையில் மனசாட்சியுள்ள பிரசங்கியார்கள் நூதனமானதும், வித்தியாசப்பட்டதுமான ஆய்வுகளில் தங்களை உட்படுத்த மறுத்து, "பொருத்தமற்ற" (வசனக்) கலப்பை செய்வதில்லை. கிறிஸ்துவுக்குள் மீட்பளிக்கும் உபதேசத்தை அவர்கள் நன்கு அறிந்து, எப்பொழுதும் அதையே சார்ந்திருந்து, பழைய எருசறேம் சுவிசேஷத்தையே பிரசங்கித்து பாவிகள் கீழ்ப்படியத்தக்கதாக அறிவுறுத்துவார்கள்; இப்படியாக பாவிகள் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, ஆத்தும விடுதலையடைந்து, இரட்சிக்கப்பட்ட தேவனுடைய ஊழியர்களாக மாறும்படி அறிவுறுத்தப்படுவர். (ரோமர். 6; 17-18). பாவிகள் தங்கள் பாவத்தின் இருளில் மூழ்கிக் கொண்டிருக்கும்போது, தங்கள் பொறுப்புகளை அவர்கள் புறக்கணிப்பதில்லை. அவர்களது பிரசங்கம், பிரிவினைகளை எதிர்க்கவும், தவறுகளையும் பாவங்களையும், கடிந்து கொள்ளப்படுவதுடன் (சபைக்குள்) ஐக்கியத்தையும், சத்திய வளர்ச்சியையும், நீதியையும் ஓங்கச் செய்வர் (நீதி 14;34; யோவான். 8;32 1. கொரி 1.10-13). அவர்கள் கிறிஸ்துவினிமித்தமும் அவரது வசனத்தினிமித்தமும் வெட்கப்படுவதால் உண்டாகும் அபாயத்தையும், எச்சரித்து, அவைகளால் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் என்பதையும் சுட்டிக் காட்டுகின்றனர். (மாற்கு. 8;38; யோவான்.12;48). நாம் விசுவாசத்தைக் கொண்டு கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம் என்பதைப் போதிப்பார்கள். (எபே.2;8-10 ரோமர்.1;5 கலா.5;6).

அவர்கள் பாவங்களை மதிக்கத்தக்க மேற்பூச்சு பூசாமலும், மேலோட்டமான ஒருபதமாக, நயமான ஒரு வார்த்தையாக பாவத்தைக் காண்பிக்காமலும் போதிக்க முயற்சிக்கின்றனர். தேவனுடைய கட்டளைகளை மீறுவதை, ஒரு வித்தியாசமான நடத்தையாகக் கூறாமல் (நேரடியாக) பாவம் என்றே அழைக்கின்றனர். (1. யோவான். 3;4 யாக்.4;17). அவர்கள் விசுவாசத்தினால் வருகிறவைகளையும், யூகத்தினால் வருகிறவைகளையும் வித்தியாசப்படுத்திப் பார்ப்பதில் கவனமாயிருக்கின்றனர்; கூடவே அவைகளை விசுவாசிகளுக்கு விளக்கப்படுத்திக் காட்டுகின்றனர்.

- - - தொடரும்


தமிழில்: **ஆறுமுகம்**



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER
Postal Regn. No. TN/WR/ER/77/2001.
Licensed to Post without Pre Payment No. TN / WR / ERD / 03 / WPP / 2001.
RNI No. 47661/87 - NEW DE

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்

கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு **சான்றிதழ்** வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**